Annual subscription Rs. 50/-

# ஸ்பைஸஸ் இந்தியா

மணம் 22
சுகம் 4
ஏப்ரல் 2009

## *Quality Appeal to Farmers*













**PROBLEMS OF MICROBES IN YOUR SPICES???**

**WELL YOUR SEARCH ENDS HERE !!!**

**1-2 Test**



**SIMPLATE**



We provide complete solution and training to Food Processing Laboratories and In-House Laboratories interested in Incorporating Rapid Food Testing Programme.

Laboratories, Food Processing Units, Food Storage Godowns, Ingredient Suppliers, Restaurants, Food Kitchens, Hospitals e-mail to us for more information :

foodkit@shahbros.com / ceo@shahbros.com

SHAH BROTHERS

MUMBAI, INDIA

Phone : (022) 24118874/75 .Fax : (022) 24118869 . Mobile; Dhaval - + 91 9821724754

ROMER Romer Labs - Singapore

Tepnel - U.K.

BIOCONTROL - U.S.A.

## SPICES BOARD

Ministry of Commerce & Industry
Government of India
Sugandha Bhavan
P.B. No. 2277
Palarivattom P.O.
Cochin - 682 025

स्पाइसेस बोर्ड
भारत

தலைவர் : **வி.ஜே.குரியன் இ.ஆ.ப**

பிரதம ஆசிரியர் : **முனைவர் பி.எஸ்.ஸ்ரீகண்டன்தம்பி**
**துணை இயக்குநர் (விளம்பரத்துறை)**

ஆசிரியர் : **எஸ். பழனிச்சாமி**
**பதிப்பாசிரியர்**

வெளியிடுபவர் : **கே. லட்சுமிக்குட்டி**
**செயலர்**

பத்திரிக்கை ஆலோசனைக்குழு
**எஸ். கண்ணன்**
இயக்குநர் (மார்க்கெட்டிங்)
**முனைவர் ஜே. தாமஸ்**
இயக்குநர் (ஆராய்ச்சி)
**ஆர். சந்திரசேகர்**
இயக்குநர் (அபிவிருத்தி)

எழுத்தாளர்களின் கருத்துக்களுக்கு
வாரியம் பொறுப்பேற்காது.

தமிழ், மலையாளம், கன்னடம், ஆங்கிலம், இந்தி, நேபாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் வெளியிடப்படுகிறது.

ஒரு வருடச் சந்தா ரூ. 50/-
ஐந்து வருடச் சந்தா ரூ. 200/-

சந்தாவை மணியார்டர் / டிராப்ட் மூலம்
The Secretary, Spices Board, Cochin - 25
என்ற பெயரில் எடுத்து
The Deputy Director (PUB), Spices Board,
P.B.No. 2277, Palarivattom P.O.,
Cochin - 682 025
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.


தொலைபேசி : 0484 - 2333610 - 616
தொலைநகல் : 0484 - 2331429, 2334429
மின் அஞ்சல் : spicesboard@vsnl.com
இணைய முகவரி : www.indianspices.com

அச்சகம்
நிசீமா பிரிண்டர்ஸ்,
கொச்சி - 18
தொலைபேசி : 2403760.

**மணம் 22 | சுகம் 4 | ஏப்ரல் 2009**


# ஸ்பைஸ் இந்தியா

**இந்திய வாசனைப் பொருட்களின்
விவசாய - வியாபார வளர்ச்சிக்காக
வெளிவரும் மாத இதழ்**




## ஏப்ரல் - 2009 இதழில்


விழிப்புணர்வு முகாம்கள் 4

வாசனைப் பொருட்கள் ஏற்றுமதி 16 சதம் உயர்வு 9

மஞ்சள் சாகுபடி 11

புதுவரவு: பொம்மி ஏலக்காய் -
ஏல விவசாயியின் வெற்றிகர முயற்சி
**பா. இரவிகுமார்** 16

மண் வளம் காக்கும் வெட்டிவேர் 19

கசகசாவின் பூர்வீகக் கதை
**எஸ். பழனிச்சாமி** 23

ஹார்ட்டிகல்சர் தெரபி 28

நிகழ்வுகள் 30

நன்னடத்தை
**போடி சிவாஜி** 36

மே மாத சாகுபடிக் குறிப்புகள் 38

விற்பனைப் புள்ளிவிவரம் 42

# அஃப்லாடாக்சின் இல்லாத மிளகாய்:

# ஆந்திர மாநிலத்தில் விழிப்புணர்வு முகாம்

மிளகாயில் அஃப்லாடாக்சின் என்பது மிளகாயில் ஈரப்பதம் அதிகமாகும்போது உருவாகும் ஒரு வகை பூஞ்சாணம் என்பதும் புற்றுநோய் போன்ற உயிர்க்கொல்லி நோய்களை உருவாக்கும் தன்மை கொண்டது.... என்பது போன்ற செய்திகளெல்லாம் ஸ்பைஸ் இந்தியா வாசகர்களுக்கு பழைய செய்தி. பல தருணங்களில் இதுபற்றி விரிவாக அறிந்த விசயந்தான். இருந்தாலும் இதனைப்பற்றி ஓரிருமுறை புத்தகங்களில் செய்தியாக வெளியிட்டால் போதுமா? மிளகாய் உற்பத்தியாகும் ஆந்திர மாநிலத்து கிராமங்களில் போய் கிளிப்பிள்ளைபோல் சொல்லிக் கொண்டே இருந்தால்தான் இந்த அறிவியல் ரீதியான செய்தி விவசாயிகளுக்கு விளங்கும் என்ற எண்ணத்தில் ஸ்பைசஸ் போர்டு இந்த வருடமும் ஆந்திர மாநிலத்தில் குண்டூர் மாவட்டத்தில் மிளகாய் அதிக அளவில் பயிரிடப்படும் கிராமங்களான நெக்கல்லு, 75/ தியல்லூர், பேடா குருபாடு, பட்டலூர், லாகாடபாடு மற்றும் ராஜிபலீம் ஆகிய கிராமங்களில் மிளகாய் விவசாயிகளுக்கு விளம்பரம் மூலம் கடந்த பிப்ரவரி 18, 2009ல் ஆந்திராவில் தொடங்கப்பட்டது.

முன்னாள் விஞ்ஞானி, முனைவர் காலித் அகமது அவர்கள் மிளகாயை விளைவிப்பது பெரிதல்ல அதனை மனிதர்கள் உட்கொள்ளும் தரத்துடன் விளைவிப்பதுதான் முக்கியமானது என்று மிளகாய் விவசாயிகளைக் கேட்டுக் கொண்டார்.

பகலெல்லாம் சூரியனைச் சாட்சியாக்கி கேள்விக் குறிபோல் முதுகை வளைத்து வயல்வெளிகளில் உழைக்கும் விவசாயிகளை இதுபோன்ற விசயங்களுக்காக சந்திப்பது அவர்கள் ஓய்வாக உட்காரும் சாயங்காலப் பொழுதே சரியானது என்று கணக்கிட்ட ஸ்பைசஸ் போர்டின் அதிகாரிகள் இந்த நினைவூட்டும் முகாம்களை சாயங்காலமாகத் துவங்கி, லேசாக இருட்டியதும் இதுதொடர்பான வீடியோ படங்களை காட்டி விவசாயிகளைக் கவர்ந்தது என்றால் அது மிகையாகாது.

விவசாயிகளை வீடுவீடாகச் சென்று கண்டு, நாங்கள் உங்களுக்கு உதவ வந்துள்ளோம் உங்களின் பிரச்சனைகளைக் கூறுங்கள். அதற்கானத் தீர்வுகளுக்கு நாங்கள் உதவுகிறோம் என்ற ரீதியில் இந்த நடவடிக்கை தொடர்ந்தது. திரு. எச்.சி. சந்திரசேகர், இணை இயக்குநர் (அபிவிருத்தி), முனைவர் பி.எஸ். ஸ்ரீகண்டன் தம்பி, துணை இயக்குநர் (விளம்பரம்), முனைவர் ஜி. உஷாராணி, உதவி இயக்குநர், இந்தித் துறை, திரு. பிஜூ செனாய், இந்தி மொழிபெயர்ப்பாளர், திரு. எ.சி. கிரீஷ் குமார், முதுநிலை கள அதிகாரி, திருமதி. சானி ஜார்ஜ், கள அதிகாரி ஆகியோர் இந்த முகாமை நடத்திட முன்நின்றனர்.





முனைவர் காலித் அகமது, முன்னாள் முதன்மை விஞ்ஞானி லாம் குண்டூர் அஃப்லாடாக்சின் முகாமில் துள்ளூர் மண்டலத்தில் உரையாற்றுகின்றார். மேடையில் மேலும் காண்பவர்கள் (வலமிருந்து) திரு. எச். சி. சந்திரசேகர், இணை இயக்குநர், ஸ்பைசஸ் போர்டு, குண்டூர், முன்னணி விவசாயி திரு. என். கிருஷ்ணாராவ் மற்றும் முனைவர் பி.எஸ். ஸ்ரீகண்டன்தம்பி, துணை இயக்குநர் (விளம்பரம்) ஸ்பைசஸ் போர்டு, கொச்சி



முகாமில் கலந்து கொண்ட விவசாயிகள்



மிளகாய் வயல்களில் பணியாற்றும் மகளிர்

# விதைவாசனைப் பயிர்கள்: குஜராத்தில் தரமேன்மை முகாம்கள் துவக்கம்

## லால்பூர் கிராமம்

குஜராத் மாநிலத்தில் பதான் மாவட்டத்தில் சமித வட்டத்தில் உள்ள கிராமம். தாங்க முடியாத வெப்பம், மணற்பரப்பு, வறண்டும் தூசி படர்ந்தும் உள்ள தோற்றம். ஆனால் இவையனைத்தும் இல்லாத நல்ல கிராமங்களைவிட பெருமையுடன் கூறிக்கொள்ளக் கூடிய பல சிறப்பு அம்சங்கள் இக்கிராமத்தில் இருக்கத்தான் செய்கிறது. இந்திய–பாகிஸ்தான் எல்லைக்கருகில், கூச் பாலைவனத்திற்கு அருகே உள்ள இக்கிராமத்தில் 600 அல்லது 700 அடிக்குக் கீழேதான் சிறிது தண்ணீர் தென்படும். அதுவும் உப்புச்சுவையுடன்.

இருந்தாலும் கடினமாக உழைக்க மட்டுமே தெரிந்த இந்த கிராமத்து மக்கள் தரமான சீரகம், பெருஞ்சீரகம், சதகுப்பை, வெந்தயம் மற்றும் ஓமம் போன்ற விதை வாசனைப் பொருட்களை உற்பத்தி செய்கின்றனர்.

அநேகமாக எல்லா விவசாயிகளுமே பசு, எருமை மற்றும் ஆடு வளர்ப்பதை முக்கியமான ஒன்றாகக் கருதுகின்றனர். விதைவாசனைப் பொருட்களைப்போலவே பால் உற்பத்தியும் அதிக அளவில் நடைபெறுகிறது.

தண்ணீர்ப் பற்றாக்குறையான கிராமத்தில் பால் செழும்பாகக் கிடைக்கிறது. வயலோரங்களில் பார்த்தால் மாட்டுச்சாணம் குவியலாகக் குவிக்கப்பட்டிருக்கும் காட்சியைக் காணலாம். இது அடுத்த பருவ கால விதை வாசனைப் பொருட்களின் விளைச்சலுக்கு வயல்களில் போடுவதற்கான முன்னேற்பாடு.

இவ்வாறு பசு, எருமை வளர்த்தல் இருப்பதால் இக்கிராமங்களில் சமையல் எரிவாயுவிற்கு பஞ்சமே இல்லை. ஆம்! 'கோபார் கேஸ்' எனப்படும் மாட்டு சாணத்திலிருந்து எரிவாயு தயாரிக்கும் அமைப்பு எல்லா வீடுகளிலும் இருக்கிறது.

வங்கிகள், அஞ்சல் அலுவலகம், காவல் நிலையம், மருத்துவமனை போன்ற வசதிகள் பல கிலோ மீட்டர் தொலைவிலேயே அமைந்துள்ளன. விதை வாசனைப் பயிர்கள் பயிராகும் பல கிராமங்களின் நிலை இதுதான்.

விவசாயிகள் பெரும்பாலும் படிப்பறிவு இல்லாதவர்களே. விவசாயத்தையும் செய்முறையாலும் அனுபவத்தாலும் பின்பற்றி வருகின்றனர்.

ஸ்பைசஸ் போர்டு லால்பூரிலிருந்துதான் விதை வாசனைப் பொருட்களை சுத்தமான முறையில் உற்பத்தி செய்து, பதப்படுத்தும் முறைகளைப் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக்கூறும் கள விளம்பர முகாமை கடந்த மார்ச் 23, 2009ல் துவங்கியது.

இந்த முகாமின் முதற்கட்டத்திற்கு சுமார் 100 விவசாயிகள் கலந்து கொண்டனர். இவர்கள் இதுபோன்று



**குஜராத்தில் பதான் வட்டத்திலுள்ள அமரபுரா எனும் கிராமத்தில் விவசாயிகள் விதை வாசனைப் பயிர்களை முறையாக பதப்படுத்தும் முறைகளை விளக்கும் வீடியோ படத்தை கவனிக்கும் காட்சி**

தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களைத் தரமான முறையில் உற்பத்தி செய்ய வேண்டுவதன் அவசியத்தையும், வழிமுறைகளையும் தங்களுக்குப் புரியும் விதத்தில் தெரிந்தவர்கள் கூறக்கேட்பது இதுவே முதல் முறையாகும். இந்நிகழ்ச்சியில் விவசாயிகளின் தேவையும், எதிர்பார்ப்பும் குறித்து வைக்கப்பட்டது. விவசாயிகளின் தேவை பெரும்பாலும் சொட்டு நீர்ப் பாசன முறை, பயிர் பாதுகாப்பு முறைகள் பற்றி வல்லுநர்களின் ஆலோசனை உதவி, இயற்கை விவசாய நுட்பங்களை அறிந்து கொள்ளுதல், சுத்தம் செய்த உற்பத்திப் பொருட்களை பதப்படுத்த பாலித்தீன் விரிப்புகள் போன்றவைகளாக இருந்தன. இக்கூட்டத்திற்கு திரு. ரமேஷ் பாய்படேல், பொதுச் செயலர், பிரதேஷ் கிஷான் விகாஷ் தலைமை தாங்கினார். விளைபொருட்களை சுத்தமான முறைகளைப் பின்பற்றி பதப்படுத்த வேண்டியதன் அவசியத்தை திரு. பி.எஸ். ஸ்ரீகண்டன் தம்பி, துணை இயக்குநர், ஸ்பைசஸ் போர்டு எடுத்துக் கூறினார். திரு. கீர்த்தி குமார் ஜே அமின், இச்சங்கத்தின் தலைவர், விவசாயிகளை தரமான உற்பத்திக்கான முயற்சிகளில் உடனே ஈடுபட சக விவசாயிகளைக் கேட்டுக் கொண்டார். பால் உற்பத்தியாளர்களின் சங்கத் தலைவர் திரு. சக்தாபாய் பவல், லால்பூர் மற்றும் திரு. ரேயானால்ஜி ஆகியோர் இதுபோன்ற விவாதங்களில் கலந்து கொண்டனர். ஸ்பைசஸ் போர்டின் இந்தி துறையின் உதவி இயக்

குநர் திருமதி ஜி. உஷாராணி மற்றும் இந்தி மொழி பெயர்ப்பாளர் திரு. பிஜுசெனாய் ஆகியோர் விவசாயிகளிடையே விவாதித்து அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

இதன் இரண்டாவது முகாம் ஆதியா எனும் கிராமத்திலும் நடைபெற இதில் 75 விவசாயிகள் கலந்து கொண்டனர். இவ்வாறு தொடர்ச்சியாக விதை வாசனைப் பயிர்கள் விளையும் முக்கியமான கிராமங்களில் குறிப்பிட்ட நாட்களில் நடைபெற்ற முகாம்களுக்கு சிறந்த வரவேற்பு கிடைத்தது. விவசாயிகள் விளைபொருட்கள் உற்பத்தியின்போது செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை போன்றவை விவசாயிகளுக்கு அவர்தம் தாய்மொழியிலேயே எடுத்துக் கூறும் விதத்தில் ஸ்பைசஸ் போர்டு தயாரித்த வீடியோ படங்கள் விவசாயிகளிடையே பெரும் ஈடுபாட்டை ஏற்படுத்தியது. இதுபோன்ற விவசாயிகள் கூட்டத்தை தொடர்ந்து நடத்திட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

இந்த முகாம்களின் மூலமாக விதை வாசனைப் பொருட்களின் விவசாயிகள் பொதுவாக வேண்டிக் கொள்வது அடுத்து வரிசைப்படுத்தப்பட்டுள்ளது:

1. ஸ்பைசஸ் போர்டின் விரிவாக்கத் திட்டங்கள்.
2. நீர் மேலாண்மை நுட்பங்கள்.
3. விதை வாசனைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான பரிந்துரைகள் மற்றும் தடை செய்யப்பட்ட பூச்சி மருந்துகளின் பட்டியல்.
4. களை நிர்வாகம், நோய்கள் மற்றும் இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதற்கான தொழில் நுட்ப ஆலோசனை.
5. அறுவடைக்குப்பின்னுள்ள செய்முறைகளுக்கான பயிற்சி.
6. கிராம அளவில் விளைபொருட்களை சேமிக்க அறிவியல் ரீதியான யுக்திகள்.
7. இயற்கை வேளாண் முறைகள் குறித்த விளக்கம்.
8. ஏற்றுமதியாளர்கள் மற்றும் பதப்படுத்துவோருடன் கூடிய கலந்துரையாடல்.
9. விதை வாசனைப் பொருட்களை உலர்த்துவதற்கு சில்பாலின் அல்லது பாலித்தீன் விரிப்புகள் போன்றவைகளாகும்.

விதை வாசனைப் பயிர்கள் விளையும் குஜராத் மாநிலத்திலுள்ள உள்கிராமங்களில் ஸ்பைசஸ் போர்டு நடத்திய இந்த தரமேன்மை முகாம் விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி தரமான பொருட்களை உற்பத்தி செய்ய வழிவகுக்கும் என்று நம்புவோம்.

# சுத்தமான விதைவாசனைப் பொருட்கள்: ராஜஸ்தானில் நிறைவுற்ற முகாம்

சுத்தமான விதைவாசனைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக ஸ்பைசஸ் போர்டு ஏற்பாடு செய்திருந்த தரமேன்மை பயிற்சி முகாம் ராஜஸ்தானில் ஏப்ரல் 1, 2009ம் தேதி நிறைவுற்றது.

ராஜஸ்தானில் ஜோத்பூர் மாவட்டத்தில் உள்ள குக்கிராமங்களான பாரா குர்த், பாரா காலா, நெவ்ரா மற்றும் பண்டிட்ஜித்கிதானி ஆகிய இடங்களில் நடைபெற்றது. மாலை நேரங்களில் தொடங்கி நடைபெற்ற இந்த முகாமில் திரளான விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்று, மனதார பங்கேற்றதுதான் இந்த முகாமின் வெற்றி என்று கருதப்படுகிறது.

தற்சமயம் சீரகம் மற்றும் சதகுப்பை போன்ற வாசனைப் பொருட்கள் அறுவடையாகிக் கொண்டுள்ளன. முகாமின் முகாமாக தெரியவந்த செய்திகள் பின்வருமாறு:



நெவ்ராவில் நடைபெற்ற முகாமில் முனைவர் கஜேந் திர சர்மா உரையாற்றும் காட்சி



பாரா குர்த் கிராமத்தில் ஆர்வத்துடன் கலந்து கொள்ளும் விவசாயி



பாரா காலா எனுமிடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட ராஜஸ்தான் விவசாயிகள்

- சேமித்து வைக்க பாதுகாப்பான இடமில்லை
- உண்மையான வாங்குவோர் யாரென்று தெரிய வில்லை
- தரமான தார்பாலின் விரிப்புகள் கிடைக்காதது

இந்தியாவிற்கு மட்டுமின்றி உலக நாடுகளுக்கே உற்பத்தி செய்யும் விதைவாசனைப் பொருட்கள் விவ சாயிகளின் தேவைகள் என்னவென்று இந்த முகா மின் மூலம் தெரியவந்தது. மேலும் பாலைவனத்தின் மணம் வீசும் இக்கிராமங்களில் பலவிதமான பறவை கள், கிளிகள், மயில், பாம்புகள், மான் கூட்டம் மற்றும் அரிதான தாவரங்கள், கருவேல், கேயார் மற்றும் வேம்பு போன்றவற்றையும் ஏராளமாக இப்பகு திகளில் காணக் கிடைக்கிறது.

# வாசனைப் பொருட்கள் ஏற்றுமதி 16 சதம் உயர்வு

ஏப்ரல்-பிப்ரவரி 2008-09 கால அளவில் வாசனைப் பொருட்களின் ஏற்றுமதி 3,95,775 டன்னாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ. 4590.50 கோடியாகும்.

சென்ற ஆண்டு இதே கால அளவில் இது 3,86,875 டன்னாக சுமார் ரூ. 3950.50 கோடி மதிப்பில் இருந்தது. இந்த ஏற்றுமதி உயர்வான ரூபாய் மதிப்பில் மிகப் பெரிய சாதனையாகும். சென்ற ஆண்டுடன் ஒப்பிடும்போது ரூபாய் மதிப்பில் 16 சதமும் அளவில் இரண்டு சதமும் உள்ளது. மேலும் டாலர் மதிப்பில் இந்த உயர்வு நான்கு சதமாகும்.

இந்த ஏற்றுமதி உயர்வில் புதினா பொருட்களின் பங்களிப்பு மட்டும் 43 சதமாக உள்ளது. மேலும் மிளகாய் 21 சதமும், மிளகு எட்டு சதமும், சீரகம் ஏழு சதமும், மஞ்சள் ஐந்து சதமும் தங்களின் பங்களிப்பைத் தந்துள்ளன.

பொதுவாகவே ஏப்ரல்-பிப்ரவரி 2008-09ல் எல்லா வாசனைப் பொருட்களுமே ஏற்றுமதியில் உயர்வு நிலையில் இருந்தன. ஆனால் சென்ற வருடத்துடன் ஒப்பிடும்போது மிளகு அளவிலும் மதிப்பிலும் குறைந்தே காணப்படுகிறது. இந்த காலகட்டத்தில் மிளகின் ஏற்றுமதி 23,350 டன்னாகும். இதன் மதிப்பு ரூ. 384.10 கோடியாகும். சென்ற வருடம் இதுவே 31,760 டன் ரூ. 466.26 கோடி மதிப்பில் இருந்தது. 2007-08ல் ஒரு கிலோ மிளகின் விலை ரூ. 146.81 ஆக இருந்தது. ஆனால் 2008-09ல் ரூ. 164.49ஆக உயர்ந்து காணப்பட்டது.

மிளகாயைப் பொறுத்தவரை இந்த கால அளவில் 1,66,000 டன் மிளகாய் ரூ. 947.35 கோடி மதிப்பில் ஏற்றுமதியானது. இதுவே சென்ற ஆண்டில் 1,76,255 டன் ரூ. 940.12 கோடி மதிப்பாக இருந்தது. இந்தியாவிடமிருந்து மிளகாய் வாங்கும் வாடிக்கை நாடுகளான மலேசியா, இந்தோனேஷியா மற்றும் ஸ்ரீலங்கா போன்ற நாடுகள் சுறுசுறுப்புடன் இருந்தாலும் வங்க தேசத்திற்கான ஏற்றுமதி கணிசமான அளவில் குறைந்து போனது.

விதை வாசனைப் பொருட்களைப் பொறுத்தவரை ஏற்றுமதி அளவிலும் மதிப்பிலும் உயர்ந்தே இருந்தது. 2009ல் சீரகம் கணிசமான அளவில் ஏற்றுமதியாகி உள்ளது. சுமார் 31,000 டன் அளவில் ரூ. 328.32 கோடி அளவில் ஏற்றுமதியாகியது. சீரகத்தைப் பொறுத்தவரை இது ஒரு சாதனையாகும்.

2008-09ல் கொத்தமல்லியின் ஏற்றுமதி அளவு 23,600 டன்கள். இதன் மதிப்பு ரூ. 169.79 கோடியாகும். சென்ற ஆண்டு 23,715 டன், ரூ. 98.02 கோடி மதிப்பில் ஏற்றுமதியாகி இருந்தது. இதன் ஒரு கிலோ விலை 2007-08ல் ரூ. 41.33 என்பது 2008-09ல் ரூ. 68.98 ஆகியது.

மதிப்பூட்டப்பட்ட பொருட்களான கறிப்பவுடர், வாசனை எண்ணெய் மற்றும் ரெசின் போன்றவையும் ஓரளவு ஏறுமுகத்தில் இருந்தன. 2008-09ல் மொத்த ஏற்றுமதி 12,450 டன். இதன் மதிப்பு ரூ. 150.62 கோடியாகும். சென்ற ஆண்டு இது 10,380 டன் ரூ. 99.37 கோடி மதிப்பில் ஏற்றுமதியாகி இருந்தது.

ஏப்ரல்-பிப்ரவரி 2009ன் கணக்குப்படி வாசனைப் பொருட்களின் ஏற்றுமதி ரூபாய் மதிப்பில் அதன் இலக்கை எட்டிவிட்டது எனலாம். ஆம்! நமது ஏற்றுமதி இலக்கு 4,25,000 டன் ரூபாய் மதிப்பில் 4,350 கோடியாகும். இதுவரை 3,95,775 டன் ரூ. 4,590.50 கோடி மதிப்பில் ஏற்றுமதியாகியுள்ளது. ஏலக்காய் (சிறியது & பெரியது) சீரகம், வெந்தயம், ஜாதிக்காய் & ஜாதிப்பத்திரி, வனிலா, கறிப்பவுடர் மற்றுமுள்ள இதர விதை வாசனைப் பொருட்கள் அவைக்கென நிர்ணயித்த இலக்கை எட்டி, ஏற்றுமதி உயர்விற்கு காரணமாக அமைந்துள்ளன.

ஏப்ரல்-பிப்ரவரி 2008-09 கால அளவில் நடைபெற்ற ஏற்றுமதி சென்ற ஆண்டு இதே கால அளவுடன் ஒப்பிடப்பட்ட அட்டவணை இத்துடன் கொடுக்கப்பட்டுள்ளது.

# அகில இந்திய அளவில் ஏப்ரல் - பிப்ரவரி 2008-09ல் ஏற்றுமதி செய்யப்பட்ட ஸ்பைசஸ் பட்டியல் (2007-08 ஏப்ரல் - பிப்ரவரியுடன் ஒப்பிடப்பட்டது)

| ITEM | TARGET FOR 2008-09 | | APRIL-JANUARY 2008-09 | | | APRIL-JANUARY 2007-08 | | | % ACHIEVEMENT OF TARGET | | % CHANGE IN 2008-09 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Qty | Value | Qty | Value | Rate | Qty | Value | Rate | Qty | Value | Qty | Value |
| PEPPER | 35,000 | 52,000.00 | 23,350 | 38,409.50 | 164.49 | 31,760 | 46,626.22 | 146.81 | 66.7% | 73.9% | -26.5% | -17.6% |
| CARDAMOM(S) | 550 | 2,500.00 | 600 | 3,707.50 | 617.92 | 430 | 2,044.17 | 475.34 | 109.1% | 148.3% | 39.5% | 81.4% |
| CARDAMOM(L) | 1,300 | 1,500.00 | 1,775 | 2,138.75 | 120.49 | 1,215 | 1,345.13 | 110.73 | 136.5% | 142.6% | 46.1% | 59.0% |
| CHILLI | 190,000 | 100,000.00 | 166,000 | 94,735.00 | 57.07 | 176,255 | 94,012.45 | 53.34 | 87.4% | 94.7% | -5.8% | 0.8% |
| GINGER | 7,000 | 3,000.00 | 4,400 | 3,032.50 | 68.92 | 6,435 | 2,511.28 | 39.02 | 62.9% | 101.1% | -31.6% | 20.8% |
| TURMERIC | 50,000 | 16,000 | 49,000 | 22,630.25 | 46.18 | 44,360 | 13,792.56 | 31.09 | 98.0% | 141.4% | 10.5% | 64.1% |
| CORIANDER | 25,000 | 10,000.00 | 23,600 | 16,278.75 | 68.98 | 23,715 | 9,801.81 | 41.33 | 94.4% | 162.8% | -0.5% | 66.1% |
| CUMIN | 28,000 | 27,500.00 | 31,000 | 32,331.73 | 104.30 | 23,265 | 24,479.79 | 105.22 | 110.7% | 117.6% | 33.2% | 32.1% |
| CELERY | 3,000 | 1,300.00 | 2,750 | 1,825.38 | 66.38 | 2,705 | 1,207.17 | 44.62 | 91.7% | 140.4% | 1.7% | 51.2% |
| FENNEL | 5,000 | 2,700.00 | 4,925 | 2,737.50 | 55.58 | 4,510 | 2,432.76 | 53.94 | 98.5% | 101.4% | 9.2% | 12.5% |
| FENUGREEK | 10,000 | 3,000.00 | 13,250 | 4,734.25 | 35.73 | 9,865 | 2,874.93 | 29.14 | 132.5% | 157.8% | 34.3% | 64.7% |
| OTHER SEEDS (1) | 7,500 | 2,500.00 | 15,600 | 5,771.50 | 37.00 | 6,975 | 2,470.02 | 35.41 | 208.0% | 230.9% | 123.7% | 133.7% |
| GARLIC | 1,000 | 500.00 | 675 | 289.75 | 42.93 | 660 | 382.25 | 57.91 | 67.5% | 58.0% | 2.3% | -24.2% |
| NUTMEG & MACE | 1.300 | 3.000.00 | 1.840 | 5.183.26 | 281.70 | 1.260 | 2.730.28 | 216.77 | 141.5% | 172.8% | 46.1% | 89.8% |




# மஞ்சள் சாகுபடி

வெளியீடு:
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
பவானி சாகர் - 638 451

பணப்பயிர்களில் மிக முக்கியமான இடத்தை வகிக்கும் மஞ்சள், இலக்கிய காலம் முதல் இன்றைய காலம் வரை இந்தியாவின் பயன்பாட்டிலும், பண்பாட்டிலும் முன்னிலை பெற்று வருவதுடன் புனிதத் தன்மை கொண்டதாகவும் கருதப்பட்டு வருகிறது. உலக அளவில் உற்பத்தி செய்யப்படும் மொத்த மஞ்சளில் சுமார் 75 சதவீதம் இந்தியாவில் விளைவிக்கப்படுகிறது. தற்பொழுது மஞ்சளிலிருந்து எடுக்கப்படும் கர்க்குமின் எனும் நிறமி அதிக மருத்துவ குணங்கள் கொண்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது. மேலும் இது அன்றாட சமையலிலும், சாயம் தயாரிக்கும் தொழிலிலும், வாசனைப் பொருட்கள் மற்றும் உணவுப் பண்டங்கள் தயாரிப்பிலும், கிருமி நாசினியாக பயன்படுத்தப்படுகிறது.

## சாகுபடி தொழில் நுட்பங்கள்

## மண்வளம் மற்றும் தட்பவெப்ப நிலை

- நல்ல வடிகால் வசதியுடைய செம்மண் மற்றும் அங்கக உரங்கள் அதிகம் கொண்ட வண்டல் கலந்த களிமண் நிலங்கள் மஞ்சள் சாகுபடி செய்ய ஏற்றது.
- மண்ணின் அமில மற்றும் காரத்தன்மை 6.5 முதல் 7.2 வரை இருந்தால் சிறப்பானது.
- கடல் மட்டத்திலிருந்து 1500 மீட்டர் உயரம் வரை உள்ள வெப்ப மண்டலப் பகுதிகளில் நன்கு வளரும்.
- மேலும் 20 டிகிரி முதல் 30 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை மற்றும் 1000 முதல் 1500 மில்லி மீட்டர் மழை அளவு கொண்ட பகுதிகள் மஞ்சள் சாகுபடிக்கு உகந்தது.

## இரகங்கள்

சாகுபடிக்கான அதிக விளைச்சல் தரும் பல மேம்படுத்தப்பட்ட இரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதன் பட்டியல் பின்வருமாறு: இந்த மஞ்சள் இரகங்களின் மகசூலும், தன்மையும் சாகுபடி செய்யப்படும் இடம், மண்ணின் தன்மை மற்றும் சூழ்நிலைக்கேற்ப மாறுபடும்.

## விதையைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் விதை நேர்த்தி

1. விதை மஞ்சளானது கிழங்கு அழுகல் நோய் தாக்காத வயலில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவையாக இருக்க வேண்டும்.

| வ. எண் | இரகங்கள் | உலர்த்தப்பட்ட மஞ்சள் மகசூல் (டன்/எக்டர்) | பயிர் காலம் (டன்/எக்டர்) | உலர் மஞ்சள் (டன்/எக்டர்) | 'கர்க்குமின்' நிறமி அளவு (%) |
|---|---|---|---|---|---|
| 1. | சுவர்ணா | 17.4 | 200 | 3.48 | 4.30 |
| 2. | சுகுணா | 29.3 | 190 | 3.52 | 7.30 |
| 3. | சுதர்சனா | 28.8 | 190 | 3.45 | 5.30 |
| 4. | ஐ.ஐ.எஸ்.ஆர். – பிரபா | 37.5 | 195 | 7.30 | 6.52 |
| 5. | ஐ.ஐ.எஸ்.ஆர். – பிரதீபா | 39.1 | 188 | 7.23 | 6.21 |
| 6. | கோ 1 | 30.5 | 285 | 5.94 | 3.20 |
| 7. | கிருஷ்ணா | 9.2 | 240 | 1.50 | 2.8 |
| 8. | சுகந்தம் | 15.0 | 210 | 3.49 | 3.1 |
| 9. | பி.எஸ்.ஆர். 1 | 30.7 | 285 | 6.29 | 4.2 |
| 10. | ரோமா | 20.7 | 250 | 6.41 | 9.3 |
| 11. | சுரோமா | 20.0 | 253 | 5.2 | 9.3 |
| 12. | இராசேந்திர சோனியா | 26.6 | 225 | 4.78 | 8.4 |
| 13. | இரங்கா | 29.0 | 250 | 7.19 | 6.3 |
| 14. | ரேஷ்மி | 31.3 | 240 | 7.19 | 6.4 |
| 15. | பி.எஸ்.ஆர். 2 | 32.7 | 240 | 6.54 | 4.6 |

2. மஞ்சள் விதைப்பதற்கு முன் கிழங்கு அழுகல் நோயைக் கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸிகுளோ ரைடு 10 லிட்டருக்கு 25 கிராம் என்ற அளவில் கரைசல் தயாரித்து விதைக் கிழங்குகளை 30 நிமிட நேரம் நனைத்து பின்னர் உலர்த்தி நட வுக்கு பயன்படுத்த வேண்டும்.

3. செதில்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த பாச லோன் 35 இசி எனும் மருந்தை 10 லிட்டருக்கு 20 மில்லி லிட்டர் என்ற அளவில் கலந்து விதைக் கிழங்குகளை 5 நிமிடம் நனைத்து பின் 6 மணி நேரம் உலர்த்தி நடவுக்கு பயன்படுத்த வேண்டும்.

4. நடவின்போது விரலி மஞ்சள் மற்றும் குண்டு மஞ்சளை தனித்தனியாகப் பிரித்து விதைக்க வேண்டும்.

5. நடவு மஞ்சளின் எடை 25 முதல் 30 கிராமிற்கு குறையாமல் இருக்க வேண்டும்.

6. விதை மஞ்சள் ஒரு எக்டருக்கு 2000 முதல் 2500 கிலோ போதுமானது.

மேலும் இயற்கை வேளாண்மை மேற்கொள்ள விரும்பும் விவசாயிகள் கிழங்கு அழுகல் நோயி னைக் கட்டுப்படுத்த ஒரு கிலோ விதைக் கிழங்கிற்கு 10 கிராம் சூடோமோனாஸ் புளூரசன்ஸ் (அல்லது) கிலோவுக்கு நான்கு கிராம் டிரைகோடெர்மா விரிடி எனும் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளைக் கலந்து நீர் கரைசலில் 30 நிமிடம் நனைத்து பின் நடவு செய்ய வேண்டும்.

## நிலத்தினை பண்படுத்துதல் மற்றும் நடவு

தமிழ் நாட்டில் பருவகாலம் ஆரம்பமாவதற்கு முன்னதாக அதாவது மே-ஜூன் மாதங்களில் நட வுப்பணியைத் தொடங்கலாம். மஞ்சள் சாகுபடி செய் யவிருக்கும் நிலத்தினை மூன்று முதல் நான்கு முறை நன்கு ஆழ உழுது கடைசி உழவிற்கு முன்னதாக ஒரு எக்டருக்கு மக்கிய தொழு உரம் 25 டன் மற்றும் 200 கிலோ கடலைப்புண்ணாக்கு ஆகியவற்றை கலந்து சீராகத் தூவி உழுதிட வேண்டும். அதன் பின்

னர் 45 செ.மீ. இடைவெளியில் பார்கள் அமைத்து 15 செ.மீ. இடைவெளியில் பார்கள் அமைத்து 15 செ.மீ. இடைவெளியில் விதை நேர்த்தி செய்யப்பட்ட கிழங்குகளை நான்கு செ.மீ. ஆழத்தில் விதைக்க வேண்டும்.

## உரமிடுதல்

பார்கள் பிடித்த பின், அடியுரமாக எக்டருக்கு 25 கிலோ தழைச்சத்து, 60 கிலோ மணிச்சத்து மற்றும் 18 கிலோ சாம்பல் சத்து தரும் உரங்களைக் கலந்து பார்களுக்கு நடுவே இட வேண்டும்.

பின் மேலுரமாக மஞ்சள் விதைத்த 30, 60, 90, 120 மற்றும் 150வது நாட்களில் ஒவ்வொரு முறையும் 25 கிலோ தழைச்சத்து மற்றும் 18 கிலோ சாம்பல் சத்து தரும் உரங்களைக் கலந்து மேலுரமாக இடவேண்டும்.

## நீர் பாய்ச்சுதல்

நட்டவுடன் நீர் பாய்ச்சவும், நட்ட பிறகு மூன்றாம் நாள் உயிர்த் தண்ணீரும் பின் வாரம் ஒரு முறையும் நீர் பாய்ச்ச வேண்டும். நிலத்தில் நீர் தேங்காமல் பார்த்துக்கொள்வது மிக அவசியம்.

## சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல்

தேவையான பாசன நீரைச் சரியான அளவில் வயலில் உள்ள அனைத்து செடிகளுக்கும் அளிக்க சொட்டு நீர்ப்பாசன முறை சாலச் சிறந்தது. இதன் மூலம் உரங்களை பாசன நீரோடு கலந்து நேரடியாக செடிகளின் வேர்பாகத்திற்கு அளிப்பதால் உரங்களின் பயன்படுதிறன் அதிகமாவதோடு உரசேமிப்பும் கிடைக்கிறது.

இம்முறையில் பக்கவாட்டு குழாய்கள் 1 மீட்டர் இடைவெளியிலும், அதில் ஒரு மணிக்கு 4 லிட்டர் சொட்டக்கூடிய சொட்டுவான்கள் 60 செ.மீ. இடைவெளியிலும் அமைக்கப்பட வேண்டும்.

பயிர் வரிசைகளுக்கிடையிலான இடைவெளியை இணைசால் முறையில் மாற்றியமைத்து இணை வரிசைகளுக்கிடையில் 40 செ.மீ. இடைவெளியும், ஒவ்வொரு இணை வரிசைக்கும் இடையில் 60 செ.மீ. இடைவெளியும் இருக்குமாறு பார்கள் அமைத்து, இணை வரிசையில் செடிக்குச்செடி 15 செ.மீ. இடைவெளி வருமாறு விதைக்கலாம்.

## நுண்ணூட்டச்சத்து

நுண்ணூட்டச்சத்து குறைபாடு இருப்பின் வெளிறிய மஞ்சள் நிறமாக மாறத் தொடங்கும். மேலும் இலை நரம்புகளுக்கிடையில் உள்ள பச்சை நிறம் மஞ்சளாகி திட்டுத்திட்டாக காட்சியளிக்கும். இரும்புச் சத்து குறைபாடு அதிகமாக இருந்தால் இலைகள் வெண்மையாக கூட மாறிவிடும்.

நுண்ணூட்டக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய 25 லிட்டர் நீரில் 15 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தை நன்கு கலந்து ஒரு நாள் இரவு முழுவதும் வைத்திருக்க வேண்டும். அடுத்தநாள் இக்கரைசலில் இருந்து எடுக்கப்பட்ட தெளிந்த நீரில் 375 கிராம் யூரியா, 375 கிராம் துத்தநாக சல்பேட், 375 போராக்ஸ் மற்றும் 375 கிராம் இரும்பு சல்பேட் ஆகியவற்றை கலக்கி பின் மொத்தம் 250 லிட்டர் வருமளவிற்கு நீர் சேர்த்து, பயிர்களுக்கு தெளித்து வந்தால், நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறை நீங்கி பயிர் செழித்து வளரும். முதல் முறை தெளித்ததுபோல் 20-25 நாட்களில் மீண்டும் ஒரு முறை இதே போன்று கரைசல் தயார் செய்து பயிர்களுக்கு தெளிக்கவும்.

## உயிர் உரங்கள்

அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபேக்டீரியா போன்ற உயிர் உரங்களை எக்டருக்கு 10 கிலோ எனும் அளவில் மஞ்சள் நடவு செய்த ஒரு மாதம் கழித்து இட வேண்டும். மேலும் வேர்உட்பூசணமான விஏஎம் உயிர் உரத்தை ஒரு எக்டருக்கு 50 கிலோ என்ற அளவில் அடியுரமாக மக்கிய தொழு உரத்துடன் கலந்து சால்களுக்கு இடையில் தூவிவிடலாம்.

**உயிர் உரங்களை மற்ற உரங்களோடு கலந்து இடக்கூடாது.**

## பின்செய் நேர்த்தி

## களை நிர்வாகம்

நட்ட மூன்றாவது நாளில் ஃபுளுக்ளோரலின் எனும் களைக்கொல்லியை எக்டருக்கு இரண்டு லிட்டர் எனும் அளவில் தெளித்து களைகளைக் கட்டுப்படுத்தலாம். மேலும் மஞ்சள் சாகுபடி நிலத்தில் உள்ள களைகளின் தன்மைக்கேற்ப களைக்கொத்தின் உதவியுடன் நான்கு அல்லது ஐந்து முறை களை எடுத்து செடிகளுக்கு மண் அணைத்து விட வேண்டும்.

### ஊடுபயிர்

ஊடுபயிராக ஆமணக்கு மற்றும் குறைந்த வய துடைய துவரை, சின்ன வெங்காயம், மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயிர், வெந்தயம் மற்றும் கொத்த மல்லி போன்ற பயிர்களையும் சாகுபடி செய்யலாம்.

### பயிர் பாதுகாப்பு

மஞ்சள் பயிரைத் தாக்கும் மிக முக்கியமான பூச் சிகள் இலைப்பேன், கிழங்கு செதில் பூச்சி, நூற்புழு மற்றும் தண்டு துளைப்பான் போன்றவையாகும்,

கிழங்கு அழுகல் நோய் மற்றும் இலைப்புள்ளி நோய் மஞ்சளைத் தாக்கும் மிக முக்கியமான நோய் களாகும்.

### பூச்சிகள்

### இலைப்பேன்

இலைகளின் அடிப்பரப்பை சுரண்டி சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும். இதனைக் கட்டுப்படுத்த எக் டருக்கு 500 மி.லி. மீதைல் டெமட்டான் மருந்தினை சிறிதளவு ஒட்டும் திரவத்துடன் (1 மி.லி./ஒரு லிட்டர்) கலந்து தெளிக்கவும்.

### கிழங்கு செதில் பூச்சி

செதில் பூச்சிகள் கிழங்கின் சாறை உறிஞ்சி சேதம் விளைவிப்பதால் கிழங்கு சுருங்கி காய்ந்து விடும், இலைகள் வெளுத்து காணப்படும். இப்பூச்சி யைக் கட்டுப்படுத்த டைமீத்தோயேட் மருந்தை ஒரு லிட்டருக்கு 2 மி.லி. என்ற அளவில் கலந்து கிழங்கு நன்கு நனையுமாறு மண்ணில் ஊற்ற வேண்டும். நடவு செய்யும் முன்பும் மற்றும் சேமிக்கும் முன்பும் விதைக் கிழங்குகளை பாசலோன் 2 மி.லி./ ஒரு லிட் டர் என்ற அளவில் உள்ள மருந்துக் கரைசலில் நனைத்து நடவு செய்யலாம்.

### தண்டு துளைப்பான்

தண்டு துளைப்பான் அந்து பூச்சிகள் மஞ்சள் நிற இறக்கைகளில் கரும் புள்ளிகளைக் கொண்டிருக்கும். அந்துப் பூச்சி இலையில் அடிப்பாகத்தில் முட்டை யிடும். முட்டையிலிருந்து வெளிவரும், வெளிர் பச்சை மற்றும் இளம் சிவப்பு நிறம் கலந்த மெல்லிய உடலுடன் உரோமங்கள் உள்ள புழுக்கள் இலையின் அடிப்பாகத்தில் பச்சையத்தை சுரண்டி உண்ணும். பின் தண்டினுள் துளையிட்டு, உட்பகுதியை குடைந்து உண்டு சேதம் ஏற்படுத்தும். துளை வாயி லில் கழிவுப் பொருட்கள் வெளித் தள்ளப்பட்டி ருக்கும். நடுக்குருத்தை தாக்கி அழித்துவிடுவதால் குருத்துப்பகுதி காய்ந்துவிடும். புழுக்கள் கீழ்நோக்கி குடைந்து வேர்க்கிழங்குகளையும் உண்டு சேதம் விளைவிக்கும்.

தண்டுத்துளைப்பானைக் கட்டுப்படுத்த, தாக்கப் பட்ட செடியின் பாகத்தை புழுவுடன் சேர்த்து அழித்துவிட வேண்டும். ஒரு லிட்டருக்கு 2 மி.லி. குளோர்பைரிபாஸ் கலந்து தெளிக்கவும்.

### நூற்புழு

நூற்புழுக்கள் தாக்கிய பயிரில் விரலியோட்டம் தடைபட்டு ஆங்காங்கே வேர்பாகம் வீங்கி முடிச்சு போல் காணப்படும். வேர்களின் உட்பகுதியில் உட் சென்று உண்ணுவதால் ஊட்டச்சத்துக்கள் மற்றும் தண்ணீர் உறிஞ்சுவது குறைந்து இலைகள் மஞ்சளாகி வாடிவிடும்.

- தொழு உரம், கம்போஸ்டு, வேப்பம் புண்ணாக்கு மற்றும் கரும்பாலை கழிவு இடுவதால் நூற்புழுக் களின் தாக்கத்தை குறைக்கலாம்.
- ஊடுபயிராக செண்டுமல்லி பயிரிடலாம்.
- நூற்புழு தாக்கிய வயலில் கார்போபியுரான் குருணை மருந்தை ஒரு ஏக்கருக்கு 12 கிலோ வீதம் நடவு செய்த மூன்றாவது மற்றும் ஐந்தா வது மாதங்களில் பயிரை சுற்றி இட்டு நூற்புழுக் களைக் கட்டுப்படுத்தலாம்.
- நூற்புழுக்களை கட்டுப்படுத்த மஞ்சளுக்கு மாற் றுப்பயிராக நெல், கரும்பு, சோளம், மக்காச் சோளம் போன்றவற்றை பயிர் சுழற்சி முறையில் சாகுபடி செய்யலாம்.

### நோய்கள்

### கிழங்கு அழுகல் நோய்

இது பருவ மழைக் காலங்களில் அதிக சேதத்தை விளைவிக்கும். இந்நோய் தாக்கிய இலைகளின் ஓரங் கள் கருக ஆரம்பித்து பின்பு செடி முழுவதும் வாடி விடும். செடியின் தண்டுப்பாகம் மென்மையாகி நீர் கோர்த்தது போல் காணப்படும். நோய் தாக்கிய செடி களை எளிதாக மண்ணிலிருந்து பிடுங்கிவிடலாம். வேர்கள் மற்றும் கிழங்குகள் அழுகி காணப்படும். இதனைக் கட்டுப்படுத்தலாம். வேர்கள் மற்றும் கிழங் குகள் அழுகி காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த

- விதைப்புக்கு முன் விதை மஞ்சளை காப்பர் ஆக்ஸிகுளோரைடு கரைசலில் ஊறவைத்து, உலர்த்தி விதைக்க வேண்டும்.
- விதைக் கிழங்குகளை துண்டாக வெட்டி நடுவ தைத் தவிர்க்க வேண்டும்.
- மழைக் காலத்தில் நிலத்தில் தண்ணீர் தேங்காத வாறு வடிகால் வசதி செய்து தர வேண்டும்.
- முற்றிலும் தாக்குதலுக்கு உள்ளான செடிகளை அப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்தி காப்பர் ஆக்ஸிகுளோரைடு லிட்டருக்கு 3 கிராம் வீதம் கலந்து செடிகளின் வேர்பகுதியில் நனையுமாறு ஊற்றி நோய் பரவுவதைத் தடுக்க வேண்டும்.
- மருந்து ஊற்றிய உடனே நீர்ப்பாய்ச்சுவதும் அல் லது நீர்ப்பாய்ச்சிய உடனே மருந்து ஊற்றுவது இந்நோயைக் கட்டுப்படுத்தாது. **மேலும் மருந்து ஊற்றிய பிறகு மூன்று அல்லது நான்கு நாட் களுக்குள் நீர்ப்பாய்ச்சுவதைத் தவிர்க்கவும்.**

## இலைப்புள்ளி நோய்

இலையின் மேற்பரப்பில் சிறிய பழுப்பு நிறப்புள் ளிகள் தோன்றி, அவை ஒன்றுடன் ஒன்று இணைந்து பெரிதாகி இலைகளைக் கருகச் செய்யும். பாதிக்கப் பட்ட இலைகளை சேகரித்து எரிக்க வேண்டும். இதன் தாக்குதலைக் குறைக்க 500 கிராம் கார்பெண் டாசிம் எனும் பூஞ்சாணக் கொல்லியைப் பயன்படுத்த வேண்டும்.

## அறுவடை மற்றும் மகசூல்

நடவு செய்த ஒன்பதாவது மாதத்தில் மஞ்சளின் இலைகள் மஞ்சளாக மாறியும் இலைகள் காய்ந்தும் தோன்றும். இந்நிலையில் அறுவடை செய்வதற்கு 10 நாட்களுக்கு முன்பாக மஞ்சள் தாள்களை தரைமட் டத்திலிருந்து 15 செ.மீ. உயரத்தில் அறுத்துவிட வேண்டும். அறுவடையின்போது கிழங்குகள் சேத மடையாதவாறு செடிகளை சுற்றி கொத்திவிட்டு அறு வடை செய்யலாம்.

ஒரு எக்டருக்கு சராசரியாக இரகங்களைப் பொறுத்து 32-35 டன்கள் வரை உலர்த்தப்படாத புதிய மஞ்சளை அறுவடையின்போது மகசூலாகப் பெற லாம்.

## அறுவடைக்குப் பின்சார்ந்த தொழில்நுட் பங்கள்

1. சுத்தப்படுத்தி வேகவைத்தல்
2. உலர்த்துதல்
3. மெருகேற்றுதல்
4. நிறமேற்றுதல்

## சுத்தப்படுத்தி வேகவைத்தல்

தாய் கிழங்கிலிருந்து பிரித்து எடுக்கப்பட்ட விரலி மஞ்சளை இரும்பு அல்லாத பாத்திரங்களில் வேகவைக்க வேண்டும். மஞ்சளை சுத்தமான நீரை ஊற்றி வேகவைக்க வேண்டும். வேகவைக்கும் பொழுது நுரை கூடிவரும் நிலையில் வேக வைத் தலை நிறுத்திவிட வேண்டும். தற்போது நீராவி மூலம் வேகவைக்கும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## உலர்த்துதல்

வேகவைத்த மஞ்சளை உலர வைக்க 10 முதல் 15 நாட்கள் தேவைப்படுகிறது. செயற்கை முறையில் 60 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையில் வெப்பக் காற் றுக் கலன்களில் உலர வைத்து விரைவில் உலர் மஞ் சள் பெறலாம்.

## மெருகேற்றுதல்

உலர்ந்த மஞ்சளில் உள்ள வேர் மற்றும் செதில் களை நீக்கி மஞ்சளின் பளபளப்புத் தன்மையைக் கூட்ட மின்சார மோட்டார் மூலம் இணைக்கப்பட்ட மெருகேற்றும் இயந்திரம் கொண்டு மெருகேற்ற வேண்டும்.

## நிறமேற்றுதல்

மெருகேற்றப்பட்ட மஞ்சளை சந்தைப்படுத்துவ தற்கு முன்னதாக நிறமேற்றுவதன் மூலம் மஞ்சள் கிழங்குகள் நல்ல தோற்றத்தைப் பெறும். உலர் முறை யில் மெருகேற்றும் இயந்திரத்தில் இருந்து மஞ்சள் கிழங்குகளை வெளியே எடுப்பதற்கு 10 நிமிடங் களுக்கு முன் மஞ்சள் தூளைத்தூவ வேண்டும்.

## உலர் மஞ்சள் மகசூல்

ஒரு எக்டரிலிருந்து சுமார் ஐந்து முதல் ஆறு டன்கள் வரை உலர் மஞ்சள் மகசூலாகக் கிடைக் கும்.

# புதுவரவு: பொம்மி ஏலக்காய் - ஏல விவசாயியின் வெற்றிகர முயற்சி



தமது பொம்மி ஏலச்செடியுடன் திரு. முருகன்

**பா. இரவிகுமார்**
கள அதிகாரி
ஸ்பைசஸ் போர்டு, போடி

வாசனைத் திரவியங்களின் அரசி என்றழைக்கப் படும் ஏலக்காய் தென்னிந்தியாவின் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் உருவானது. இந்தியா வில் 73,795 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிட்டு 12,540 மெட்டன் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் 4561 ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்து 835 மெ. டன் ஏலக்காய் உற்பத்தியாகியுள்ளது. உற்பத்தி ஹெக் டேருக்கு 253 கிலோவாகும். இங்கு மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி (ஆனமலைக் குன்றுகள், நீலகிரி மற்றும் கூடலூர் பகுதி, கீழ் பழனிமலைக் குன்றுகள், மேக மலை பகுதிகள், சேத்தூர் மற்றும் சிவகிரி மலைப்ப குதிகள்) அல்லாது கிழக்கு மலைத் தொடர்ச்சி மலைப் பகுதிகளான சேர்வராயன் மற்றும் கொல்லிமலைப் பகுதிகளிலும் ஏலம் சாகுபடி செய்து வருகின்றனர்.

மேகமலைப் பகுதியில் ஏலக்காய் சாகுபடி செய்ய ஏதுவான தட்பவெப்ப நிலையில் அமைந்துள் ளதால், ஏலக்காய் சாகுபடி விவசாயிகளின் வாழ்வில் ஒரு அங்கமாக அமைந்துள்ளது. சிறு மற்றும் குறு விவசாயிகள் ஏலம் மட்டுமல்லாது காப்பியும் அதிக ளவில் சாகுபடி செய்து வருகின்றனர். சில முன் னோடி விவசாயிகள் உயர் விளைச்சல் தரும் 'நல் லானி' இனத்தை பயிரிட்டனர். சரியான தட்பவெப்ப நிலை மற்றும் முறையான பராமரிப்பு இல்லாததால் நல்லானி இனத்தின் மகசூல் குறைவாகவே காணப் படுகிறது.

இம்மலைப் பகுதியிலுள்ள பொம்மராஜபுரம் எனும் ஊரில் பல சிறு மற்றும் குறு விவசாயிகள் கடந்த மூன்று தலைமுறைகளாக ஏலத்தை பயிரிட்டு

வருகின்றனர். இவர்களில் கடந்த 1990-2000 வருடம் ஸ்பைசஸ் போர்டு திரு. ராமைய்யா அவர்களுக்கு உற்பத்தி திறன் அதிகம் செய்ததற்கான இரண்டாம் பரிசு வழங்கியது. அவர்களைப் போலவே அவருடைய மகன் திரு. முருகன் அவர்கள் உயர் விளைச்சல் தரும் 'மலபார்' இனச் செடியைக் கண்டுள்ளார். அச்செடியிலுள்ள காய்கள் திரட்சியாகவும், கரும் பச்சை நிறத்தை உடையதாகவும் உள்ளது. இச்செடியின்மீது தனிக்கவனம் செலுத்தி கண்காணித்ததில் அடுத்த வருடத்திலும் (பருவத்திலும்) செடியின் மகசூல் கூடுதலாகவும், பூச்சி மற்றும் நோய் தாக்குதல் குறைவாகவும் காணப்பட்டது. கடந்த 2002-03 பருவத்தில், நல்ல குணமுள்ள காய்களைத் தேர்வு செய்து, ஸ்பைசஸ் போர்டு பரிந்துரைப்பதுபோல் நாற்றங்கால் அமைத்தார். 2003-04 பருவத்தில் 200 நாற்றுகளை மட்டுமே நடவு செய்தார். கடந்த வருடம் முதல் இச்செடிகள் முழுஅளவில் மகசூல் கொடுக்கத் தொடங்கியுள்ளது. குறிப்பாக நோய் மற்றும் பூச்சி தாக்குதல் குறைவாகவே காணப்படுகிறது.

இச்செடியில் உற்பத்தியாகும் காய்கள் கரும் பச்சை நிறத்துடன் நிறமாறாதிருப்பதால் 'பச்சைக்காய்' எனப் பெயரிட்டனர். இக்காய் பொம்மராஜபுரத்தில் கண்டெடுத்ததால் "பொம்மி சுப்பீரியர்" என்றழைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.


## நாற்றங்கால்

இந்த இனத்தை விதைகள் மூலமாகவே உற்பத்தி செய்துள்ளார். ஸ்பைசஸ் போர்டு பரிந்துரைப்பது போல் 3 மற்றும் 4 தடவை பறிக்கும் முதிர்ச்சி அடைந்த ஏலப்பழங்களிலிருந்து விதைகளை அகற்றி, விதை நேர்த்தி செய்தபின் நாற்றங்கால் அமைத்தார். அவை வளர்ந்தபின் பாலித்தீன் பைகளில் இட்டு நாற்றுகளை மட்டுமே தோட்டத்தில் நடவு செய்துள்ளார். ஆனால் இனிவரும் வருடங்களில் கிழங்கு மூலம் நாற்றங்கால் அமைக்கவுள்ளார். இவ்வாறு உற்பத்தி செய்வதால் எல்லாச் செடிகளும் ஒன்றுபோலவே காணப்படும். மிக முக்கியமாக செடிகள் மிக குறுகிய காலத்தில் மகசூல் அளிக்கும்.

## தோட்ட பராமரிப்பு

நடவு மற்றும் மறுநடவு செய்யும் தோட்டங்களில் போதிய நிழல் தரும் மரங்கள் தவிர மற்றுமுள்ள செடி கொடிகளை அகற்றினார். நடவு செய்வதற்கு 2-3 மாதங்கள் முன்பே, செடிக்கு செடி மற்றும் வரிசைக்கு வரிசை 10 அடி வீதம் அமைக்க 2Ω x 2Ω x 3 அடி அளவுள்ள குழிகளை அமைத்தார். அக்குழிகளிலுள்ள மேல் மண்ணைத் தனியாக வைத்தார். வடகிழக்கு பருவமழை தொடங்கும்போதோ அல்லது அக்டோபர்/நவம்பர் மாதங்களில் நடவு செய்ய ஏற்றதாகும். நடவு செய்யும்போது மேல் மண்ணுடன் உலர்ந்த சாணம்/தொழு உரம் மற்றும் மக்கிய இலை தழைகளை இட்டுள்ளார். நடவு செய்த மூன்று மாதங்களில் 32 தட்டைகள் உற்பத்தியாகியுள்ளது. ஆனால் இதே பருவத்தில் மற்ற இனத்தில் (மலபார்) 5 தட்டைகளே உற்பத்தியாகியுள்ளது. அதுபோலவே ஜூன் 2007 நடவு செய்த செடிகளில் 88 தட்டைகளும், 32 காயுள்ள சரங்களும் வளர்ந்தன. ஆனால்





மற்ற இனத்தில் 20 தட்டைகள் மட்டுமே உற்பத்தியாகியது. ஆகவே 'பொம்மி சுப்பீரியர்' உயர் விளைச்சல் தரும் தனி இனமாக உள்ளது.

பருவமழை பொழியும் காலம் தவிர மற்ற காலங்களில் தண்ணீர் தெளிப்பான் மூலம் தெளிக்கப்படுகிறது. இப்பகுதியில் காற்றின் தாக்கம் அதிகமுள்ளதால் நிழல் பராமரிப்பு செப்டம்பர்/அக்டோபர் மாதங்களில் செய்யப்படுகிறது. செடிகளைச் சுற்றி மண் அணைத்தும் வருடத்திற்கு இரண்டு முறை அறுவடை செய்த பின்பும் மற்றும் செப்டம்பர்/அக்டோபர் மாதங்களில் முதிர்ந்த இலைகளை அகற்றியபின் மண் அணைக்கப்படுகிறது.

## உரமிடல்

ஏலச்செடிகளுக்கு வருடத்திற்கு இரண்டுமுறை உரமிடப்படுகிறது. நடவு செய்த தோட்டத்தில் நடவு செய்த இரண்டு மாதங்கள் கழித்தோ, அல்லது 2-3 தட்டைகள் உற்பத்தியாகியவுடன் டை அமோனியம் பாஸ்பேட் மற்றும் பொடி செய்த வேப்பம் பிண்ணாக்கு செடிக்கு 150 கிராம் வீதம் செடியைச் சுற்றி இட்டு நீர் பாய்ச்சப்படுகிறது. அதன்பின் ஆறு மாதம் கழித்து மேலே கூறியவை செடிக்கு 200 கிராம் வீதம் இடப்படுகிறது.

மகசூல் கொடுக்கும் செடிகளுக்கு களை எடுத்த பின் டை அமோனியம் பாஸ்பேட் மற்றும் பொடி செய்த வேப்பம் பிண்ணாக்கு 25 கிலோ வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு நாள் ஊறியபின் தெளிந்த நீருடன் சம அளவு நீர் கலந்து செடிக்கு 2-3 லிட்டர் மழை உள்ள காலங்களில் மட்டுமே தெளிக்கப்படுகிறது.

## நோய் மற்றும் பூச்சி நிர்வாகம்

இவ்வினச் செடிகளில் பூச்சி மற்றும் பூஞ்சாணத் தாக்குதல் வெகு குறைவாகவே காணப்படுகிறது. ஒரு சில இடங்களில் மட்டுமே இலைப்பேன் தாக்குதல் தென்பட்டது. தண்டு துளைப்பான் தாக்குதல் முற்றிலும் காணப்படவில்லை. பூச்சி தாக்குதலிலிருந்து கட்டுப்படுத்த வருடத்திற்கு 6-8 முறை 30-40 இடைவெளியில் குயினால்பாஸ், அல்லது மோனோகுரோட்டோபாஸ் என்ற பூச்சி மருந்துகளில் ஏதாவது ஒன்றினைத் தெளிக்கின்றார். குறிப்பாக கடந்த முறை தெளித்த மருந்தை அடுத்த முறை தெளிக்காமல் மாறி மாறி தெளிக்கிறார். அதுபோலவே இரண்டுக்கு மேற்பட்ட பூச்சி மருந்துக் கலவையைத் தெளிப்பதில்லை. நோய் பாதிப்பு குறிப்பாக கிழங்கு அழுகல் நோயின் பாதிப்பு இல்லை. நடவு செய்ததிலிருந்து பூஞ்சாணக் கொல்லியை உபயோகப்படுத்தவில்லை. ஆனால் இப்பருவத்தில் ஒரு செடியில் கிழங்கு அழுகல் நோய் கண்டறியப்பட்டு பூஞ்சாணக் கொல்லி தெளிக்கப்பட்டுள்ளது.

## மகசூல்

முதல் மகசூல் நடவு செய்த 18 மாதத்தில் கிடைத்தது. நடவு செய்த மூன்றாம் வருடம் முழுமையான விளைச்சல் கிடைத்துள்ளது. இத்தோட்டத்தில் 8-10 தடவைகளில் மகசூல் எடுத்துள்ளனர். மூன்றாவது முதல் ஆறாவது எடுப்பு மகசூலில் செடிக்கு 500 கிராம் உலர்ந்த காயும், மற்ற மகசூலில் ஒரு தடவைக்கு குறைந்தது 200 கிராம் வீதம் எடுத்துள்ளார். ஆக ஒரு செடியில் ஒரு பருவத்தில் 2.8 கிலோ கிராம் உலர்ந்த காய் எடுத்துள்ளார். இவ்வாறு மகசூல் கிடைத்ததால் ஒரு ஹெக்டேருக்கு சுமார் 2000 கிலோ கிடைக்க வாய்ப்புள்ளது.

தற்சமயம் இச்செடிகள் ஆரோக்கியமாக உள்ளதால் மேற்கூறிய முறையில் பராமரிப்பு செய்தால் மூன்று-நான்கு வருடங்களுக்கு நிலையான மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது.


## பொம்மி சுப்பீரியர் தேர்வு செய்தல்

இவ்வினத்தில் கூடுதல் மகசூல் கிடைப்பது மட்டுமல்லாது நோய் மற்றும் பூச்சி தாக்குதல் குறைவு, மேலும் இடுபொருட்கள், பராமரிப்பு செலவு மற்ற இனங்களைக் காட்டிலும் வெகு குறைவாகவே உள்ளது. ஆகவே வடகிழக்கு பருவமழை பொழியும் பாகங்கள் மற்றும் அதுபோன்ற பகுதிகளுக்கு ஏற்றதாக இருக்கும்.

# மண் வளம் காக்கும் வெட்டிவேர்

எஸ். பழனிச்சாமி
ஆசிரியர்
ஸ்பைசஸ் போர்டு, கொச்சி

மண்-உயிர்கள் நிலைத்திருக்க இயற்கை அருளிய ஊட்டச்சத்து. மண் இல்லை என்ற நிலையை கற்பனைகூட செய்து பார்க்க இயலாது. மண்ணை நம்பி மரம், மரத்தை நம்பி மற்ற உயிர்கள் என்று உயர் வாழ்வின் அடிப்படையே மண் என்றும் கூறலாம். இத்தனை அருமை மிக்க மண்ணின் வளத்தைக் கவர்ந்து செல்லும் கள்வனாக இருப்பது அதிகப்படியான மழை. பெரும்மழை பெய்யும் காலங்களில் மண்ணின் மேற்பகுதி அடித்துச் செல்லப்படும். மண் அரிப்பு என்று கூறப்படும் இந்நிகழ்ச்சி நாட்டின் பொருளாதாரத்தையே பாதிப்பதாகும். எனவேதான் மண் அரிப்பு என்பதை உலகளாவிய பிரச்சனை என்று குறிப்பிடுகின்றனர்.



உதாரணமாக இந்தியாவில் விளைச்சல் நிலத்தில் பாதி மேல் மண் இழப்பு என்ற காரணத்தினால் பாதிக்கப்பட்டு உற்பத்தித் திறனை இழந்து நிற்கிறது என்று கணக்கிடப்பட்டுள்ளது. விவசாய முறைகளில் ஏற்பட்டுள்ள சில மாற்றங்களும் இந்த பிரச்சனையை மேலும் பாதிக்கும் வண்ணம் உள்ளன. உணவுப் பற்றாக்குறையைத் தீர்க்க கூடுதல் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற குறிக்கோளில் பல்வேறு வகையான பயிர்களைத் தொடர்ச்சியாக வரிசை முறையில் நடவு செய்வதும் மழைநீர் நிலத்து மண்ணை அரித்துச் செல்ல வழிவகுக்கிறது. முடிவில், பயிர்களின் வளர்ச்சிக்குப் போதுமான ஈரப்பதம் கூட கிடைக்காமல் போகிறது.


மண் அரிப்பைத் தவிர்க்கும் வழிகளைக்காண பல நாடுகளும், தங்களது பட்ஜெட்டின் கணிசமான தொகையை செலவழித்தும், எல்லோராலும் எளிதில் அமைத்துக் கொள்ளக்கூடிய வழியைக் கண்டறிய இயலவில்லை. விவசாயிகள்தான் மண் அரிப்பைத் தடுக்கும் முயற்சிகளில் தீவிரம் காட்ட வேண்டும் என்று பலரும் கருத்து கூறியதுண்டு. ஆனால் எளிதான வழிகள் இருந்தாலன்றி சாதாரண விவசாயிகளினால் மண் அரிப்பைக் கட்டுப்படுத்த இயலாது.

இந்நிலையில் வாஷிங்டனில் உள்ள உலக வங்கி, இந்தியாவில் மைசூருக்கு அருகில் உள்ள விவசாயிகள் மண் அரிப்பை, நிலச்சரிவுகளைத் தடுக்க வெட்டிவேர் புல்லை பயன்படுத்தி வருவதை அறிந்தனர். அதுவும் 200 ஆண்டுகாலமாக! உடனடியாக 1987 முதலாக இந்தியா, சீனா, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, நைஜீரியா, மடகாஸ்கர், பிரேசில், ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் இந்த எளிய முறையை சோதனை செய்தன. வெற்றிகரமான இம்முறையால் சீனாவில் சரிவுப் பகுதிகளிலுள்ள சுமார் 60 சதவீத தேயிலை மற்றும் சிட்ரஸ் பயிர்கள் பாது காக்கப்பட்டுள்ளன. இவ்வாறு **வெட்டிவேர், வெற்றி வேராக விவசாயிகளுக்கு உதவி வருகிறது.**

இந்த 'வெற்றிவேர்' இதோ! ஏல விவசாயிகளுக்கு உதவட்டும் என்ற முறையில் ஸ்பைஸ் இந்தியா அதன் விவசாய நண்பர்களுக்கு அறிமுகம் செய்கிறது.

அறிமுகம் என்பது வெட்டிவேரை இதுவரை மண் வளம் காக்கப் பயன்படுத்தாதவர்களுக்கு மட்டுமே! ஏற்கெனவே நாங்கள் வெட்டிவேரைப் பயன்படுத்தி வருகிறோமே என்று பெருமை கூறிக் கொள்ளும் நண்பர்களே! உங்களின் அனுபவக் குறிப்பை ஸ்பைஸ் இந்தியாவில் இனி எழுதலாமே!

ஏலத்தோட்டப் பகுதிகளில் மழைக் காலங்களில் நிலச்சரிவு ஏற்படவதும், 'இடுகரை' விழுவதும், இதனால் ஒவ்வொரு வருடமும் ஏலச் செடிகள் அழிவதும் வழக்கமான நிகழ்ச்சி. ஏல விவசாயிகளே! இதோ அருகிலுள்ள படங்களைக் கவனியுங்கள். மண் அரிப்பைத் தடுக்க கற்சுவர்கள் எழுப்பியும் மழை நீரால் சேதமாக்கப்பட்ட ஒரு நிலப் பகுதியில் வெட்டிவேர் நட்டதும் அந்த பூமி எவ்வாறு உறுதி பட்டு விட்டது? கற்சுவரின் ஊடே வெட்டிவேர் எவ்வாறு வளர்ந்து செல்கிறது? என்ன....? இப்போதே வெட்டிவேர் நட வேண்டும் என்ற எண்ணம் மனத்தில் அரும்பி விட்டதா? பிறகென்ன செயல்படுங்கள். செலவில்லாத சிக்கனமான ஒரு தாவரத்தை இயற்கை அருளியிருக்கிறது. அதை பயன்படுத்திக் கொள்வது விவசாயிகளே! உங்களது சாமர்த்தியம்.




## வெட்டி வேரை எவ்வாறு நடுவது?

தமிழில் இலமிச்சம்வேர், வெட்டி வேர், விலா வேர் என்று பல்வேறு பெயர்களில் குறிப்பிடப்படும் வெட்டிவேர் பொதுவாக எல்லா பகுதிகளிலும் கிடைக்கக்கூடியதாகும். வெட்டிவேரின் செடிகளை வேருடன் வெட்டி தோண்டி எடுத்து, (கைகளால் பறிக்க இயலாது) ஒரு கொத்தாக உள்ள செடியை தனித்தனியே பிரிக்க வேண்டும். பின் வேர்பகுதியிலிருந்து 15-20 செ.மீ. மேலுள்ள இலைகளை வெட்டியும், வேர்பகுதியிலிருந்து 10 செ.மீ. கீழுள்ள வேர்களை வெட்டி நடுவதற்குள்ள நாற்றுக்களை தயாரிக்க வேண்டும். வெட்டி வேரின் மண் அரிப்புப் பணியை முழுமையாகப் பெற வேண்டுமெனில் இதை 10-15 செ.மீ. இடைவெளியில் நடுதல் அவசியம்.

மண்ணை நம்பி வாழும் விவசாயிகள் மண்ணைக் காப்பது அவசியமல்லவா?

சேறு இருந்தால்தானே சோறு கிடைக்கும்?







## வெட்டி வேர் ஏன் மண் அரிப்பைத் தடுக்கப் பயன்படுத்தப்படுகிறது?

- சரியான முறையில் நடவு செய்தால் வெட்டிவேர் துரிதமாக வளர்ந்து அடர்ந்த, நிலையான மண் அரிப்பைத் தவிர்க்கும் தடுப்பாகிறது.
- இதன் உறுதியான சிம்புவேர்கள் பூமிக்குள் 3 மீட்டர் ஆழம் வரை அடர்ந்து படர்ந்து மண்சரிவு, உடைப்பு போன்றவற்றைத் தடுக்கின்றது.
- நிலத்தில் பல வருடங்கள் நிலைத்திருக்கும் தன்மை கொண்ட இந்த வெட்டி வேருக்கு குறைந்த அளவு பராமரிப்பு போதுமானது.
- வெட்டிவேர் மலட்டுத் தன்மை கொண்டது. ஏனென்றால் இது தண்டு, கிழங்கு போன்ற பாகங்களை உண்டாக்குவது இல்லை. இது களை வகைப் புல் அல்ல.
- வெட்டிவேரின் கூர்மையான இலைகளும், வாசமிக்க வேரும் எலி, பாம்பு மற்றும் இவை போன்ற பிராணிகளை விரட்டும்.
- இதன் இளம் இலைகள் கால்நடைகளுக்கு இனிய உணவாகும்.
- இது நீர் நாட்டம் கொண்டதாகவும், அதே சமயம் பாலைச்செடி இனமாகவும், மண்ணைக் காக்கும். வெள்ளப்பெருக்கானாலும், சொட்டு நீர் காணா வறட்சியானாலும் நிலத்தை விட்டு நீங்கா மண்ணின் உயிர் காக்கும் தோழன்.
- இது மற்ற விவசாயப் பயிர்களின் வளர்ச்சியில் போட்டியிடாது. அவற்றின் வளர்ச்சியில் துணை நிற்கும்.
- மண் தடுப்பிற்காக இது வளர்ப்பதும் எளிது. அது போல், இது தேவையில்லை என்ற நேரத்தில் நிலத்தை விட்டு அகற்றுவதும் எளிது.
- இது எல்லாவகையான மண்ணிலும் பலவகையான காலநிலையிலும் வளமுடன் வளரும்.

- இதனைச் சுற்றியுள்ள மற்ற விவசாயப் பயிர்கள் வறட்சி, வெள்ளம், பூச்சி, நோய், நெருப்பு போன்ற காரணங்களினால் அழிய நேர்ந்தாலும், வெட்டிவேர் அழியாது. அடுத்து வரும் மழையிலிருந்து மண்ணைக் காக்க மண்ணுள் மறைந்திருக்கும். இடுக்கண் களையும் நண்பன் போல.

மண் வளத்தையும், மண் அரிப்பையும், மண்ணில் ஈரத்தன்மையை நிலைப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அணைக்கட்டுகள், கால்வாய்கள் மற்றும் சாலைகளிலும் நிலத்தை உறுதிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப் படுகிறது.


நெல் வயல்களில் வெட்டிவேரை நடலாம். இதனால் வயலில் அமைக்கப்பட்ட கரைகள் உறுதிப்படும். இதன் வேரில் இருக்கும் எண்ணெய்த் தன்மை எலிகளை ஓட விரட்டும். இதன் வேர் செங்குத்தாக பூமிக்குள் ஊடுருவிச் செல்வதால், இது நெற்பயிரையோ அதன் விளைச்சலையோ எவ்விதத்திலும் பாதிக்காது. ஒவ்வொரு ஆண்டும் வெட்டிவேரை தரைமட்டத்திற்கு வெட்டி விட்டு, வெட்டிவேர் நெற்பயிருக்கு கூடுதல் நிழல் தராமல் தடுக்கலாம்.

வெட்டிவேர் புல்லை வெட்டி கோடை காலங்களில் பழமரங்களைச் சுற்றிலும் போடுவதால் வறட்சியிலிருந்து மரங்களைக் காக்கலாம். மேலும் இந்த இலைகள் சில பூச்சிகளை விரட்டுகிறது.

**ஆதாரம்:**

VETIVER GRASS
The Hedge Against Erosion
1990
The World Bank
Washington D.C.

goldin HI-TECH CLEANING PROCESS DEHULLING PROCESS MACHINERY




- Screen-air Separators
- Clean-O-graders
- Destoners
- Gravity Separators
- Impact Hullers
- Hull Separators
- Air Classifiers

*Also we manufacture*

- Belt Conveyors
- Bucket Elevators
- Screw Conveyors
- Redler Chain Coveyors
- Cyclones
- Air Locks
- Bag Filters
- Centrifugal fans etc.

SINGLE SOURCE FOR TURN-KEY PROJECTS
GOLDIN EXPERTISE AT YOUR SERVICE

A leader in Separation Machineries

EX - COLLABORATOR OF FORSBERG INC. U.S.A.

Attention
Spice Processors
Seeds Processors
Oilseeds Millers

- Cleaning & Grading system for Spices, grains & seeds
- Dehulling & hull Separation Systems
- Material conveying system & Dust collection plant
- Pre-cleaning and silo storage Plants
- Cleaning, Decorticating and oil mill plants

GRAINS : Wheat, Maize, Barley, Paddy, Coffee, Pulses
SPICES : Black Pepper, Coriander, Celery Seed, Caraway Seed, Fennel, Cumin Seed, Sesame Seed, Fenugreek
OIL SEEDS : Sunflower, Groundnut, Castor Seed, Soyabean, Rape Seed, Neem Seed

KINDLY CONTACT
GOLDIN (INDIA) EQUIPMENT PVT. LTD.
F/29, B.I.D.C. Industrial Estate, Gorwa Vadodara-390 016
**Mob :** 94260 79535, 98250 61427
**Telefax :** 91-0265-2280168, 2290642
**E-mail :** goldinequip@yahoo.com, sales@goldinequip.com
website : www.goldinequip.com

# கசகசாவின் பூர்வீகக் கதை

எஸ். பழனிச்சாமி

திருமதி. மேனகா காந்தி, யஸ்மின் சிங்குடன் இணைந்து எழுதியுள்ள * BRAHMA'S HAIR புத்தகத்திலிருந்து கசகசா பற்றிய ஒரு சுவாரஸ்யமான குறிப்பு. கசகசா செடி பூமிக்கு எப்படி வந்தது? ஒரு புராணக்கதை உண்டு. கதையானாலும், அதன் முடிவில் சில கருத்துக்கள் இது சாதாரணக்கதையல்ல... இது ஒரு காரியக்கதை என்பதை உணரச் செய்கின்றது. எடுத்துக்காட்டாக, இக் கதையில் வரும் 'பொஸ்டோ' என்பதுதான் வங்காள, இந்தி மொழிகளில் கசகசாவைக் குறிக்கும் பெயராக இருக்கிறது. அதேபோல் 'அபின்' உட்கொண்டவரின் மனோ நிலைகள் போன்றவை புராணக் காலத்திலேயே கணித்து வைக்கப்பட்டுள்ள உண்மைகளாகின்றன. இவை யாவும் 'BRAHMA'S HAIR' என்ற இந்திய தாவரங்களைப் பற்றிய புராணக் கதைகளைத் தொகுத்து வழங்கும் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. இனி கதைக்குப் போவோமா....

கங்கை நதிக்கரை ஓரத்தில் ஒரு முனிவரின் குடில், ஏகாந்தமான அவரவது வாழ்க்கையில் அவருக்குத் துணையோ ஓர் எலி.

ஒருநாள் அந்த எலி முனிவரின் மடிமீது ஏறி "மாண்புமிகு முனிவரே, நான் உங்களிடம் ஒரு வரம் கேட்கலாமா?" என்று பணிவுடன் கேட்டது. எலிக்கு வரமா? என்று வியப்படைந்த முனிவர், எலி என்ன கேட்கும் என்ற நினைவில், 'உனக்கு நிறைய உணவு தானே வேண்டும்? என்று கேட்டார். "இல்லை முனிவரே இல்லை. எனக்கு உணவு வேண்டாம். என்னைப் பூனைகள் துரத்திக் கொண்டே இருக்கின்றன. அவற்றை எதிர்க்கும் வல்லமை என்னிடமில்லை. தயவு செய்து என்னை ஒரு பூனையாக மாற்றி அவற்றிற்கு சமமாக ஆக்கி விடுங்களேன்" என்று வேண்டிக் கொண்டது.

எலியின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட முனிவரும் தனது கமண்டலத்திலிருந்த தீர்த்தத்தை எடுத்து எலியின் மீது தெளிக்க எலி பூனையானது. மகிழ்ச்சியுடன் 'மியாவ்' என்றவாறு வெளியே ஓடியது.

சில நாட்களுக்குப் பின்னர், பூனை முனிவரைக் காண வந்தது. அதன் உடம்பில் காயங்கள், சில இடங்களில் ரோமம்கூட பறிக்கப்பட்டு பரிதாபமாக இருந்தது. மிக மெல்லிய குரலில் 'முனிவரே எனக்கு இப்போது ஒரு புதிய எதிரி, நாய். என்னை ஒரு நாயாக்கி விடுங்களேன். நாய்களுடன் சண்டையிட வேண்டும்' என்றது. முனிவர் தீர்த்தத்தை பூனையின் மீது தெளிக்க பூனை நாயாக மாறி ஆவேசத்துடன் குரைத்துக் கொண்டே ஓடியது.

* உலகில் காணும் தாவரங்கள் யாவும் பிரம்மதேவனின் முடியிலிருந்து உருவாக்கப்பட்டவை என்று சொல்லப்படுகிறது.

சில நாட்கள் கழிந்தன.

முனிவர் ஆழ்ந்த தியானத்தில் இருந்தார். அவரது காலடியில் மெலிந்து போய் உணவுப் பற்றாக்குறையால் திண்டாடும் நிலையில் ஒரு நாய் முனிவரின் முகம் பார்த்துக் காத்திருந்தது. "முனிவரே பல நாட்களாகவே நான் சாப்பிடவில்லை. ஒரு நாய்க்கு எப்படி உணவு கிடைக்கும் என்ற வழியும் தெரியவில்லை. மரங்களில் காய்த்து கனிந்து கிடக்கும் கனிகளை விருப்பம்போல் தின்று மகிழும் குரங்குகளைப் பார்த்து நான் பொறாமைப்படுகிறேன்" என்று தனது அடுத்த விருப்பத்தை முனிவருக்கு மறைமுகமாகக் கூறியது. முனிவரும் வழக்கம் போலவே நாயைக் குரங்காக மாற்றினார்.

மரத்திற்கு மரம் தாவி, விரும்பிய கனிகளை திகட்டும் வரை தின்று மகிழ்ந்தது குரங்கு. தாங்க முடியாத வெப்பத்தை தரும் கோடைக்காலம் வந்தது. மரத்தில் குடியிருக்கும் குரங்கிற்கு குடிதண்ணீர் தட்டுப்பாடு. அதோ! அந்த குளத்தில் உள்ள சகதியில் புரண்டு மகிழும் காட்டுப் பன்றிக்கு இந்த கோடை பற்றிய கவலையே இல்லையே! ம்.... பிறந்தால் இந்த பன்றியாகப் பிறக்க வேண்டும் என்று ஏக்கப் பெருமூச்சு விட்டது.

மரத்தினடியில் அமர்ந்திருந்த முனிவருக்கு குரங்கின் ஏக்கம் புரிந்தது. குரங்கை காட்டுப் பன்றியாக மாற்றினார். பன்றி குடுகுடுவென குளத்தை நோக்கி ஓடி, அதிலிருந்த சகதியில் விழுந்து புரண்டு மகிழ்ந்தது.

இரண்டு நாட்கள் கடந்தன.

ஒரு அரசன் காட்டுப் பன்றிகளை வேட்டையாட வந்தான். யானையின் மீது அமர்ந்துகொண்டு அவன் எய்த அம்புகள் பாய்ந்து பன்றிகள் மாய்ந்தன. அவ்வாறு வந்த ஒரு அம்பின் பாய்ச்சலில் இருந்து நமது பன்றி அபூர்வமாக தப்பித்துக் கொண்டது. அரசன் வேட்டையை முடித்துத் திரும்பியதும், ஒளிந்திருந்த பன்றி முனிவரின் குடில் நோக்கி ஓடியது. "முனிவரே! இது மகா ஆபத்தான வாழ்க்கை. வேண்டவே வேண்டாம். என்னை உருவத்தில் பெரியதும் அதிசக்தி மிக்கதுமான யானையாக மாற்றி விடுங்கள்" என்று பதட்டத்துடன் முறையிட, முனிவரும் பன்றியை யானையாக்கினார்.

மீண்டும் பிரச்சனை!

அரசின் ஆட்கள் இந்த காட்டு யானையை அடக்கிப் பிடித்து அரண்மனைக்கு கொண்டு சென்று கட்டிப் போட்டனர். காடெங்கும் சுற்றித் திரிந்த சுதந்திரம் இப்படி திடீரென பறிபோகும் என்று யார் நினைத்தது? யானை வருந்தியது. ஒருநாள் அரசனும் அரசியும் இந்த யானை மீதேறி கங்கையில் நீராடி வரலாம் என்று புறப்பட்டனர். யானை இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தப்பித்து முனிவரை காண வேண்டும் என்று தீர்மானித்தது. ஆற்றங்கரையை நெருங்கியதும், திடீரென உடலைக் குலுக்கியது. அரசி கீழே விழப்போக, அரசன் லாவகமாக அரசியைக் கட்டிப் பிடித்து கீழே விழாமல் தடுத்து, தனது கைகளில் தவழந்த அரசிக்கு முத்தமிட்டார்.

யானை ஓடோடிச் சென்று முனிவரின் கால்களில் விழுந்து மன்றாடியது. கண்ணீர் வடித்தது. உலகில் உள்ள உயிர்ப் படைப்புகளிலேயே எப்போதும் உல்லாசமான வாழ்க்கை வாழ்வது 'அரசி'தான். முனிவரே! இதுவே தாங்கள் எனக்குத் தரும் கடைசி வரமாக இருக்கட்டும். என்னை ஒரு அரசியாக மாற்றி விடுங்கள் என்றது. திகைப்படைந்த முனிவர் 'அதெப்படி முடியும்? ஒரு அரசிக்கு அரசன் வேண்டும். அரசனுக்கு ஆட்சி செய்ய ஒரு நாடு வேண்டும். வேண்டுமானால் ஒன்று செய்கிறேன். உன்னை ஒரு அழகு மயமான பெண்ணாக மாற்றுகிறேன். உன் திறமையால் நீ ஒரு அரசனை மணந்துகொள்' என்று கூறி யானையை ஒரு பேரழியாக மாற்றினார். அவளது பெயர் பொஸ்டோமொனி. முனிவருடன் வாழ்ந்து

வந்தவள் முனிவருக்குப் பணிவிடை செய்து கவனித்துக் கொண்டாள்.


ஒரு நாள் களைப்படைந்திருந்த ஒரு வாலிபன் வந்தான். 'நான் வேட்டையாடிக் கொண்டிருந்தேன். இப்போது பசியும் தாகமுமாக இருக்கிறது. என் பசிக்கு பழமும் தாகத்திற்குத் தண்ணீரும் தருவீர்களா' என்று கனிவுடன் கேட்டான். பொஸ்டோமொனி கொண்டுவந்து கொடுத்தாள். கனியை வாங்கிக் கொண்டவன் கனி தந்த பெண்மணியைக் கண்டு மதி மயங்கிப்போனான். அந்த வாலிபன் பக்கத்து நாட்டரசன். அவளை மணந்து கொள்ளத் தீர்மானித்து தன்னுடன் அழைத்துச் சென்றான். பொஸ்டோமொனி முனிவரை அக்கணமே மறந்து போனாள். முனிவருக்கு நன்றி கூறவில்லை! ஏன்! திருமணத்திற்கு கூட அழைக்கவில்லை.

மனம் வருந்திய முனிவர், செய்நன்றி மறந்து அரசனுடன் சென்ற பெண்ணை சபித்தார்.

திருமணம் நடந்து சில நாட்களுக்குள் பொஸ்டோமொனி கால் தவறி கிணற்றுக்குள் விழுந்து இறந்து போனாள்.

பேரழகியான தன் மனைவி தன்னைவிட்டு போனாளே! என்று மனம் வருந்திய மன்னன் முனிவரிடம் சென்று அழுதான். முனிவரும் தான் மனதார அவ்வாறு சபித்திருக்கக்கூடாது என்று உணர்ந்தார்.

மன்னா வருந்தாதே! உனது ராணி, ஒரு எலியாக, பூனையாக, நாயாக, குரங்காக, பன்றியாக, யானையாக இருந்து பின்தான் உன் மனைவியாக மாறினாள். நான் அவளுக்கு என்றும் அழிவில்லா வாழ்வைத் தருகிறேன். அவளது உடல் அந்த கிணற்றுக்குள்ளேயே இருக்கட்டும். அக்கிணற்றை மண்ணைக் கொண்டு நிரப்பு. அவளது சதையிலும், எலும்பிலுமிருந்து ஒரு செடி முளைத்தெழும். அது போஸ்டோ அல்லது பாப்பி என்று வழங்கட்டும்.



இச்செடியின் பூவிலிருந்து அபின் உருவாகும். மனிதர்கள் பேராசையுடன் அதனைத் தின்பர். இந்த அபினை யாரெல்லாம் தின்பார்களோ அவர்கள் பொஸ்டோமொனி எந்தெந்த மிருகங்களின் வடிவங்களில் இருந்தாளோ அவற்றின் தன்மைகள் எல்லாம் அவர்கள் அடைவார்கள்.

அபின் உட்கொண்ட மனிதன்,

எலியைப்போல் குறும்பு செய்வான்,

பூனையைப்போல் பாலை விரும்புவான்,

நாயைப்போல் கலகம் செய்வான்,

குரங்கைப்போல் அசுத்தமுள்ளவனாகவும்,

பன்றியைப்போல் கொடூரமானவனாகவும்,

யானையைப்போல் பலமுள்ளவனாகவும்,


ராணியைப்போல் உற்சாகமுள்ளவனாகவும்

இருப்பான் என்றும் கூறினார்.

அரசன் முனிவர் கூறியது போலவே செய்தான். வளர்த்தியான, மென்மையான வெள்ளை இலைகளைக் கொண்ட செடி ஒன்று வளர்ந்தது. அரசன் பொஸ்டோமொனியை பாதுகாத்தான். ஒவ்வொரு வருடமும் அதன் விதைகளை எடுத்து தோட்டத்தில் விதைத்தான். இவ்வாறு அந்த அரசன் இறக்கும் சமயம் அவனது நாடெங்கும் நூற்றுக்கணக்கான (பாப்பி) கசகசா மலர்கள் பூத்துக் குலுங்கின.

## இந்திய மொழிகளில் கசகசா

| | | |
|---|---|---|
| வங்காளம் | – | பொஸ்டோ |
| இந்தி | – | பொஸ்ட் |
| கன்னடம் | – | பிளிகசகச |
| மலையாளம் | – | கசகசா |
| மராத்தி | – | அபு |
| சமஸ்கிருதம் | – | அபீனம் |
| தமிழ் | – | கசகசா |



*With Best Compliments From,*

# MOODY ICL CERTIFICATION LTD.,

*(Group Company of Moody international, UK)*

MOODY INTERNATIONAL

***Our Services:***

➢ **SYSTEM CERTIFICATION**

- QMS ISO 9001:2008 (UKAS/NABCB)
- EMS ISO 14001:2004 (UKAS)
- OHSAS: 18001.
- ISMS ISO 27001 (UKAS)
- TS 16949 (IATF)
- AS 9100

➢ **FOOD CERTIFICATION**

- FSM 22000:2005 (UKAS)
- ISO 9001 + HACCP
- Eurepgap (UKAS/COFRAC)
- BRC (British Retail Consortium) Certification
- Marine Stewardship Council (Chain of Custody)
- GMP (Good Manufacturing Practice) for procedures of animal feed
- GTP (Good Training Practice) for cereals and grain storage
- Responsible Fishing Scheme (RFS)

➢ **SOCIAL CERTIFICATION:**

- WRAP Certification
- SA 8000

➢ **PRODUCT CERTIFICATION**

- CE Marketing

*DIRECTIVES COVERED*

- PED, SPVD, TPED, ATEX
- Machinery, LVD, EMC, RoHS
- Medical Devices, Invitro and active Implantable Devices
- Construction products, Toys
- ASME Stamping (U, S etc. Stamping)
- Other legal compliance certification
- IBR, MOM, DOSH Approvals
- WEEE/IECQ QC 080000

***Training Courses:***

Moody International Provides a complete range of Technical and General Management Trainings

## MOODY ICL CERTIFICATION LTD.

(Group Company of Moody international, UK)
38, DJ Complex,7th Street,
Cross Cut Road,
Gandhipuram,
Coimbatore - 641012.

Ph: 0422 – 4373265,
Tele Fax: 0422 – 4373309
Mobile: 9447124569.
*E-mail:* *micl.coimbatore@moodyint.com, pvrkin@yahoo.com*

# வயதானவர்களுக்கும் மனநிலை சீரற்றவர்களுக்கும் நலன் தரும் ஹார்ட்டிகல்சர் தெரபி

**Horticulture Therapy - For the old and Retarded** என்ற பிரசுரம் கேரள வேளாண் பல்கலைக் கழகத்தால் 1986ல் வெளியிடப்பட்டது. இதனை எழுதியவர் முனைவர். ஜி. ஸ்ரீகண்டன் நாயர். இவர் ஹார்ட்டிகல்சர் தெரபியின் புராஜக்ட் லீடராக பணியாற்றியவர். வயதானவர்கள், மன அழுத்தம் உள்ளவர்கள் ஒரு ரோஜா செடி வளர்த்தால் போதும், அச்செடி முதல் பூ பூக்கும்போது இவர்களின் மனம் லேசாகி, மகிழ்வுடனும் மலர்ச்சியுடனும் விளங்கும் என்று நம்மிடம் கூறியுள்ளார். ஸ்பைஸ் இந்தியா வாசகர்களின் நலன் கருதி அந்த ஆங்கிலப் பிரசுரத்தைத் தமிழாக்கித் தருவதில் மகிழ்ச்சி.

**- ஆசிரியர்**

தோட்டக்கலை என்பது ருசிகரமான தாவர உலகம். அதில் உள்ளதெல்லாம் -

- பழங்கள்
- காய்கறிகள்
- அலங்காரச் செடிகள்
- தோட்டப் பயிர்கள்
- வாசனைப் பொருட்கள
- மருத்துவச் செடிகள்

இவையாவுமே மனதைக் கவர்ந்து கிளர்ச்சியூட்டுபவை. உங்களுக்குத் தேவையான கலோரித்தேவைகளைத் தரும்.

இவை மன ஓய்வு தரும்
இவை திருப்தி தருபவை
நீங்கள் தாவரங்களைப் பார்க்கலாம்
தாவரங்களைப் பராமரிக்கலாம்
விளைபொருட்களை அறுவடை
செய்யலாம்
மனதளவில் மகிழ்வடையலாம்
உடற்பயிற்சி செய்யலாம்
அவற்றைப் பார்ப்பதால், தொடுவதால், நுகர்வதால், பராமரிப்பதால் மகிழ்வு பெறலாம். இவற்றால் நீங்கள் மனமகிழ்வு பெறலாம். இதுவே ஹார்ட்டிகல்சர் தெரபி எனப்படும்.

## இதன் குறிக்கோள் என்ன?

உங்களுக்கு உடற்பயிற்சியைத் தந்து உங்களுக்கு மனமகிழ்வைத் தந்து உங்களின் ஆவலைத் தூண்டி, உங்களின் செயல்பாடுகளை கிளர்ச்சியுரச் செய்து, நீங்கள் உண்டு அனுபவித்து, அமைதி

யுடன் வாழ்ந்து, உங்களின் வாழ்க்கைச் சூழலை மேம்படச் செய்து, உங்களின் வாழ்வில் மறு மலர்ச்சி கிடைத்து..... இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி... மென்மேலும் மகிழ்ச்சியுடனும், நிம் மதியுடனும் வாழ்வதாகும்.

## இதன் பின்புலம்

இம்முறைக்கான பின்புலமானது நமது ஆயுர்வே தக் குறிப்புகளிலேயே உள்ளன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் புஷ்பா-ஆயுர்வேதத்தில் மனச் சிதைவுற்றவர்களுக்காகக் கூறப்பட்டுள்ளன.

பின்னர் அமெரிக்காவும் ஜப்பானும் இதனையே 'கார்டன் தெரபி' என்ற பெயரில் பிரபலப்படுத்தின. பின் இது 'ஹார்டோ தெரபி' என்றாகி, இப்போது ஹார்ட்டிகல்சர் தெரபி என்று வந்துள்ளது.

கேரளா வேளாண் பல்கலைக் கழகம் 1984ல் இந்த ஹார்ட்டிகல்சர் தெரபிக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்தது. இது துவங்கிய இரு மையங்களுள் ஒன்று திருச்சூருக்கு அருகில் உள்ள பெருங்கண்டூரிலுள்ள போப்பால் மெர்சி ஹோம், சாந்திவனம். இது மனச் சிதைவுற்றவர் களுக்கான மையமாகும். இரண்டாவது செசிர் ஹோம், திருவனந்தபுரத்திலுள்ள உடல் ஊனமுற்ற வர்களுக்கான நிலையம்.

## இவர்கள் என்ன செய்கிறார்கள்?

அவர்கள் விதை நடுகிறார்கள்
பயிர்களைக் கவனிக்கிறார்கள்
பயிர்களைப் பாதுகாக்கின்றனர்
அழகைக் கண்டு மகிழ்கின்றனர்
விளைச்சலை அறுவடை செய்கின்றனர்
உண்டு மகிழ்கின்றனர்
பார்த்து மகிழ்ச்சி
நுகர்ந்து மகிழ்ச்சி
தொட்டு மகிழ்ச்சி
இப்படி அவர்களது மனதிலெங்கும்
மகிழ்ச்சி..... மகிழ்ச்சிதான்

அவர்கள் என்னவெல்லாம் விதைத்தனர்?

வெண்டி, கத்திரி, மிளகாய்,
அமரான்தஸ், வெள்ளரிக்காய்,
பூசணி, புடலங்காய், பாகற்காய்......

எவற்றை நட்டனர்?

ரோஜா, செம்பருத்தி, போகன்வில்லா,
டாலியா, வாழை, செர்ரி, மாங்காய்,
சப்போட்டா மற்றும் பல....

தாவரங்களை எவ்விதம் வளர்த்தனர்?

நீரூற்றி
உரமிட்டு
களை எடுத்து
பயிர்களைப் பாதுகாத்து
விளைச்சலை அறுவடை செய்து
அவர்கள் பயிர்களை கவனிக்கிறார்கள்
அவற்றின் வளர்ச்சியை உணர்கின்றனர்
செடிகளைத் தொட்டு, மணத்து, கண்டு, மகிழ்ந்து
வித்தியாசமான கிளர்ச்சியூட்டும் மகிழ்ச்சி
ஒன்று அவர்களின் மனதில் நுழைந்து விடுகிறது.

பயிர்களின் வளர்ச்சிபோலவே
அவர்களின் மனமும் வளர்ச்சியடைகிறது.
மருந்தேதுமில்லா மனவைத்தியம் தான்
ஹார்ட்டி தெரபி.

ஹார்ட்டி தெரபியில் மனத்தளவில் மகிழ்வு கிடைக்கிறது. அதனால் வித்தியாசமான செயலாற்றல் கிடைத்து பயிர் வளர்ச்சி என்ற ஒரு குறிக்கோள் அவர்களின் வாழ்க்கைக்கு புது அர்த் தத்தைத் தந்துவிடுவதால், அவர்களுக்கு வாழ்க் கையில் ஒரு ஆசை பிறந்து அது பயிர்களின் அறுவடைவரை வளர்ந்து அவர்களின் மன இறுக்கத்தைத் தளர்த்தி விடுகிறது.

எனவே ஹார்ட்டி தெரபிக்கு சிறப்பான எதிர்காலம் உள்ளது. அது அவர்களுக்கு ஒளிமயமான வாழ்க்கையை அமைத்துத் தருகிறது.

# நிகழ்வுகள்

## முத்துகாபட்டி



தமிழகத்தில் முத்துகாபட்டி எனுமிடத்தில் மஞ்சளுக்கான மண்டல அளவிலான கருத்தரங்கு கடந்த மார்ச், 14ம் தேதி நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்ட அப்பகுதி மஞ்சள் விவசாயிகளின் ஒரு காட்சி




முத்துகாபட்டி கருத்தரங்கில் நாமக்கல் தோட்டக் கலைத்துறை உதவி இயக்குநர் திரு. அசோகன் அவர்கள் விவசாயிகளிடையே உரையாற்றும் காட்சி

## ஊட்டி




ஊட்டியில் மார்ச் 3ம் தேதி நடைபெற்ற தரமேன்மைப் பயிற்சி திட்டத்தில் வெள்ளைப் பூண்டு விவசாயிகளுக்கு விளக்கம் கூறுபவர் திரு. எல்.ஆர். ராஜகோபு, உதவி இயக்குநர், தோட்டக்கலைத்துறை, ஊட்டி



ஊட்டி பயிற்சி முகாமில் கலந்து கொண்ட விவசாயிகள்

# வால்பாறை





வால்பாறையில் விவசாயிகள்-விஞ்ஞானிகள் கலந் துரையாடல் நிகழ்ச்சி மார்ச் 6ம் தேதி நடைபெற்றது. அதில் முனைவர் மோகன்குமார், இயக்குநர், உபாசி உரையாற்றும் காட்சி



வால்பாறை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள்

# தார்வாட்




கர்நாடக மாநிலத்திலுள்ள தார்வாடில் பிப்ரவரி 24ம் தேதி தோட்டக்கலை/வேளாண்துறை அதிகாரிகளுக் காக நடைபெற்ற மிளகாய்க்கான பயிற்சி வகுப்பில் தார்வாடிலுள்ள யுஎஎஸ் சின் பூச்சியியல் துறை வல் லுநர் முனைவர் பி.சி. கம்மன்னா மிளகாயில் பூச்சி களை கட்டுப்படுத்தும் நுணுக்கங்களை விளக்கும் காட்சி



பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட அதிகாரிகள்

# குல்கோட்டி



கர்நாடகத்தில் கடாக் மாவட்டத்தைச் சேர்ந்த வேளாண் அதிகாரிகளுக்கான தரமேன்மைப் பயிற்சி வகுப்புகள் பிப்ரவரி 25ல் நடைபெற்றது

# மங்கன்




சிக்கிம் மாநிலத்திலுள்ள மங்கனில் பிப்ரவரி 24ல் நடைபெற்ற வேளாண் அதிகாரிகளுக்கான பயிற்சி வகுப்பில் ஒரு காட்சி

# பெரியகுளம்




திரு. ஆர். சந்திரசேகர், இயக்குநர் (அபிவிருத்தி), பெரியகுளத்தில் நடைபெற்ற மண்டல அளவிலான ஏலக்காய் கருத்தரங்கில் ஏலவிவசாயிகளிடையே உரையாற்றும் காட்சி. மேடையில் அமர்ந்திருப்போர் (இடமிருந்து) முனைவர். நடராஜன், விஞ்ஞானி, ஐசி ஆர்ஐ, மயிலாடும்பாறை, திரு. ஜியா-உத்-தின் அக மது, உறுப்பினர், ஸ்பைசஸ் போர்டு மற்றும் கே.எஸ். ஆர்.ஜெ. ராஜ்குமார், உறுப்பினர், ஸ்பைசஸ் போர்டு ஆகியோர்



கருத்தரங்கில் கலந்து கொண்ட ஏலவிவசாயிகள்

# கூத்தி




கர்நாடக மாநிலத்தில் சோமவார்பேட்டைக்கருகிலுள்ள கூத்தி எனுமிடத்தில் நடைபெற்ற இயற்கை முறையில் வாசனைப் பொருட்களை உற்பத்தி செய்யும் முறைகளை விளக்கிக் கூறும் கருத்தரங்கில் முனைவர் கே. தனபால், விஞ்ஞானி உரையாற்றும் காட்சி




கருத்தரங்கில் கலந்து கொண்ட ஏலவிவசாயிகள்

# சிறுதோணி



கடந்த மார்ச் 19ல், கேரளத்திலுள்ள இடுக்கி மாவட்டத்தில் சிறுதோணி எனுமிடத்தில் நடைபெற்ற இயற்கை விவசாய கருத்தரங்கில் முனைவர் ஜோன்சிமணி தோட்டம், முதுநிலை கள அதிகாரி, ஸ்பைசஸ் போர்டு




இயற்கை விவசாய கருத்தரங்கில் கலந்து கொண்ட விவசாயிகள்

# பாமானி



மஹாராஷ்டிரா மாநிலத்திலுள்ள விதர்பா எனுமிடத்தில் மிளாகாய் மற்றும் மஞ்சளுக்காக நடைபெற்ற கருத்தரங்கில் விவசாயிகள் இயற்கை விவசாய முறைகளை பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்துவது திரு. எஸ்.எஸ். சர்குந்தே இ.ஆ.ப. மாவட்ட ஆட்சியர், பந்தாரா மாவட்டம்



கருத்தரங்கில் கலந்துகொண்ட மிளகாய் மற்றும் மஞ்சள் விவசாயிகள்

# திரிபுரா



திரிபுரா மாநிலத்திலுள்ள அகர்தலாவில் நடைபெற்ற மாநில வேளாண் அதிகாரிகளுக்கான பயிற்சி வகுப்பில் வேர்பிடித்த மிளகு நாற்றுக்களை உற்பத்தி செய்யும் வழிமுறைகளை எடுத்துக்கூறி விளக்குபவர் திரு. திஜேந்திர மோகன் பர்மன், கள அதிகாரி, ஸ்பைசஸ் போர்டு, அகர்தலா

# ஃபுட்டக்ஸ் 2009



ஸ்பைசஸ் போர்டு மார்ச் 3-6, 2009 தேதிகளில் டோக்கியோவில் நடத்தப்பட்ட ஃபுட்டக்ஸ் 2009 எனும் கண்காட்சியில கலந்து கொண்டபோது வாரியத்தின் பிரதிநிதிகளான முனைவர் கே.ஜே. மதுசூதனன் (இடது) மற்றும் முனைவர் எம்.பி. சுரேஷ் (நடுவில்) துணை இயக்குநர்கள் முன்னணி இறக்குமதியாளர்களுடன் உரையாடும் காட்சி



ஃபுட்டக்ஸ் கண்காட்சியில் வர்த்தக விசாரணைகள் நடைபெறும் காட்சி

# கல்ஃபுட், துபாய்




ஸ்பைசஸ் போர்டு மார்ச் 23–26, 2009ல் துபாயில் நடைபெற்ற கல்ஃபுட் கண்காட்சியில் கலந்து கொண்ட போது வாரியத்தின் பிரதிநிதிகளான திரு. சி.ஆர். புருஷோத்தமன், உதவி இயக்குநர் (இடமிருந்து மூன்றாவது) மற்றும் திரு. ஜி. கோபால கிருஷ்ணன், உதவி இயக்குநர், ஸ்பைசஸ் போர்டு, துபாய் வர்த்தகர்களுடன்



கல்ஃபுட் கண்காட்சியில் வர்த்தக விசாரணைகள் நடைபெறும் காட்சி

# நன்னடத்தை

கோடை விடுமுறை என்றாலே
போக்குவரத்து
பரபரப்பாகிவிடுகிறது.

இது வாகனப் போக்குவரத்து
மட்டுமல்ல
உறவினர் வீட்டிற்கான
போக்கும்
வரவும்தான்.

எப்போது வரும்
ஏப்ரல் விடுமுறை....
சொந்த பந்தங்களைக்
கண்டுபேசி
உண்டு மகிழ்ந்து....
உறவுகளுக்கு உறுதியளித்து
பாசங்களுக்கு பங்கைத் தந்து
நெருங்கியவர்களுடன்
நெஞ்சம் பகிர்ந்து
இப்படி எத்தனையோ
கொடுக்கல் வாங்கல்கள்
நடப்பது இந்த
விடுமுறைக் காலத்தில்தான்.

ஆனால் இதில் பல விதமான
அன்புத் தொல்லைகள் வரும்....
இதில் பெரும்பங்கு வகிப்பது
விருந்தோம்பலில்தான்.

ஒரு வீட்டிற்கு விருந்தினர்
வருகை என்றால் போதும்....
அவர்களை வரவேற்பது
என்பதும்....
அவர்களுக்கு மதிப்பும்
கௌரவமும் தருவது
கோழி, ஆடு, மீன், முட்டை
பிரியாணி என்பன போன்ற
உணவு வகைகளே!
என்பது
எழுதப்படாத
நியதியாக உள்ளது.

வருகின்ற விருந்தாளியின்
உடல்நிலை என்ன?
அவர்தம்
உணவுப் பழக்கம் என்ன?
என்று எதையும் கணக்கில்
கொள்ளாமல்...
அவர்களின் தேவையை
புறக்கணித்துவிட்டு
வன்முறையாக மேற்கூறிய
உணவு வகைகளைப் படைத்து
அவர்களின் விழிபிதுங்க
உண்ண வைத்து
கட்டுப்பாடாக இருந்தவர்களை
மருத்துவமனைகளை
எட்டிப் பார்க்க வைப்பதுதான்
இன்றைய
அன்பான விருந்தோம்பல்முறை..

இது ஒரு விதமான
அன்பு தடவிய
வன்முறையல்லவா?

இதற்கு மாறாக....
வருகின்ற விருந்தினர்
உறவோ.... நட்போ....
அவர்களுக்கு எது பிடிக்கும்
என்பதை அறிந்து
அவற்றைச் சமைத்து
வா... சாப்பிடு
உனக்கு பிடித்தவை எல்லாம்
உள்ளன
உன் தேவைக்கு சாப்பிடு
என்று கூறிப் பாருங்கள்....

வந்த விருந்தினர்
உறவு பலப்படும்
நட்பு வெளிப்படும்.

தொலைதூர
விமானப் பயணங்களில்
இந்த கொள்கை
பின்பற்றப்படுகிறது.
பயணச் சீட்டை முன்பதிவு

செய்யும்போதே
சைவ உணவா
அசைவ உணவா
என்று கேட்டறிந்து
தேவையானதைப்
பரிமாறுவதைக் காண்கின்றோம்.

விருந்தோம்பலைப் போலவே
நட்பு கருதி
பரிசுப் பொருட்களை
வழங்குவதும்
இதுபோல்தான்.

புகைபிடித்தல் என்பதே
தெரியாத எனக்கு
பலரும் 'லைட்டர்கள்'
பரிசளித்துள்ளனர்.

கொண்டுவந்து
கொடுத்தவர்களின்
பதவி மற்றும்
வயது கருதி இருகரம் நீட்டி
வாங்கி அதனையே
அது தேவைப்படும்
நபர்களுக்கு நகட்டிவிட்ட
அனுபவம் உண்டு.

நமக்குத் தேவையானதை
அன்பளிப்பாகத் தந்தால்
அதில் ஒரு
'புரிதல்' இருப்பதை
நட்புணர்வுள்ள மனங்கள்
உணர்ந்து கொள்ளும்.

இதுபோன்ற
அன்பான உபசரிப்புகள்
நட்பில் மட்டுமல்ல
விவசாயத்திலும்
வியாபாரத்திலும்
இருக்கத்தான் செய்கிறது.

ஒரு பல்முனை
வர்த்தக நிறுவனம்
அதன் ஏலவிவசாயப் பிரிவு
சுமார் பலநூறு ஏக்கருக்கும்
மேலான பரப்பளவுள்ளது.

இதுவரை எப்படியோ
விவசாயம் நடந்தது...
ஆனால் தற்போதையத்
தேவை என்ன?
இயற்கை விவசாயம்...
என்பதை உணர்ந்து
வெளிநாட்டு வர்த்தகர்களை
மட்டுமல்ல
இயற்கை விவசாயத்தை
உறுதி செய்யும்
வல்லுநர்களையும்
இந்தியாவில்
கேரளத்தில்
இடுக்கி மாவட்டத்திற்கு
அழைத்து வந்து
மண்பரிசோதனை முதல்
தேவையான அனைத்து
சோதனைகளையும் செய்து....
அவர்களின் ஒப்புதல் பெற்று
முழுமையான இயற்கை
விவசாயம் செய்துவரும்
நிறுவனம் ஒன்று
நம்முடன்
செயலாற்றிக் கொண்டுதான்
உள்ளது.

அந்த நிறுவனத்தின்
ஏலவிவசாயச்
செலவு கணக்கில்
இரசாயன உரங்களுக்கு
இடமே இல்லை.
அந்த நிறுவன மேலாளர்களின்
மனமும்
மண்ணும் இப்போது
எதிர்பார்ப்பது
மண்புழு உரத்தை....
அதற்குத் தேவையான
மாட்டுச் சாணத்தை....


ஒன்று மட்டும் நிச்சயம்.
அந்த நிறுவனம் அதன்
நல்ல எதிர்காலத்தை
தீர்மானித்துக் கொண்டது
என்பது மட்டுமல்ல
சுற்றுப்புறத்தையும்
சக உயிர்களுக்கும்
பாதுகாப்பு தருகிறது என்பதால்
இந்த முயற்சியில்
உள்ளவர்கள் அனைவருமே
இயற்கை
எழுதிக் கொண்டிருக்கும்
நன்னடத்தைச் சான்றிதழில்
இடம்பெறத்
தயாராகிவிட்டவர்கள்தான்.

விவசாயிகள் அனைவருமே
இச்சான்றிதழ் பெற
முயற்சிக்கும்
காலம் வந்துவிட்டது

**போடி சிவாஜி**

# முக்கிய வாசனைப் பயிர்களுக்கான மே மாத சாகுபடிக் குறிப்புகள்


தமிழில்:
**எம்.எஸ். இராமலிங்கம்,**
முதுநிலை கள அதிகாரி,
கோயம்புத்தூர்

| *பயிர்களின் பெயர்* | *சாகுபடி முறைகள்* |
|---|---|
| **ஏலக்காய்**<br>நாற்றங்கால் பராமரிப்பு<br> | ➢ நாற்றங்காலில் தேவைக்கேற்ப தண்ணீர் ஊற்ற வேண்டும்.<br>➢ நாற்றழுகல் நோயைக் கட்டுப்படுத்த 0.2 சத காப்பர் ஆக்ஸி குளோரைடு அல்லது 0.2 மான்கோசெப் கரைசலை மண்ணில் ஊற்ற வேண்டும்.<br>➢ டிரைக்கோடெர்மா அல்லது சூடோமோனாஸ் அல்லது பேசில்லஸை உபயோகித்து உயிரிக் கட்டுப்பாட்டு முறையிலும் நாற்றழுகல் நோயைக் கட்டுப்படுத்தலாம்.<br>➢ இலை அழுகல் நோயின் அறிகுறிகள் காணப்பட்டால் அதனைக் கட்டுப்படுத்த 0.3 சத மான்கோசெப் கரைசலைத் தெளிக்க வேண்டும்.<br>➢ இலைப் புள்ளி நோயின் ஆரம்ப அறிகுறி காணப்பட்டால் அதனைக் கட்டுப்படுத்த 0.25 சத டைபோலாடான் அல்லது 0.20 சத பேவிஸ்டினைத் தெளிக்க வேண்டும். |
| ஏலத்தோட்டப் பராமரிப்பு | ➢ அதிக நிழல் உள்ள இடங்களில் பருவ மழை காலங்களில் போதிய சூரிய வெளிச்சம் கிடைப்பதற்கு ஏதுவாக நிழல் சீரமைப்பை மேற்கொள்ள வேண்டும். அதாவது 60 சத சூரிய வெளிச்சம் கிடைப்பது செடியின் வளர்ச்சிக்கு நல்லது.<br>➢ போதிய நிழல் இல்லா இடங்களில் சந்தன வேம்பு, கருணா, பலா போன்ற நிழல் மரக் கன்றுகளை நட வேண்டும். இது ஏலச் செடியின் வளர்ச்சிக்கு ஏதுவாக இருக்கும். வேர்ப்புழு தாக்குதலும் குறையும்.<br>➢ மே கடைசியில் அல்லது ஜூன் முற்பகுதியில், போதுமான கோடை மழை கிடைத்த பின்பு, ஏல நடவுப் பணியினை மேற்கொள்ள வேண்டும். மேலும் நாற்றின் தூர்ப் பகுதியில் போதுமான அளவில் காய்ந்த இலை/தழை மற்றும் களை எடுத்த செடிகளைக் கொண்டு மூடாக்கு இட வேண்டும்.<br>➢ அதிக தண்ணீர் தேங்கும் மற்றும் குறைவான வடிகால் வசதி உள்ள தோட்டங்களில் போதுமான வடிகால் வசதி அமைக்க வேண்டும்.<br>➢ பருவ மழை தொடங்குவதற்கு முன்பு காய்ந்த இலைகள் மற்றும் இலை உறைகளை (தொங்கு சோகை) கவாத்து செய்திருக்க வேண்டும். ஏல வல்லிகளை மூடாக்கின் மேல் இருக்குமாறு எடுத்துவிட வேண்டும்.<br>➢ நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களில், மே கடைசியில் அல்லது ஜூன் முற்பகுதியில் போதுமான மழை கிடைத்த பின்பு, முதல் தவணை உரமிட வேண்டும். ஒரு எக்டருக்கு 90 கிலோ யூரியா, 207 கிலோ ராக் பாஸ்பேட் மற்றும் 137 கிலோ பொட்டாஷ் என்ற அளவில் இடவேண்டும். (இது ஒரு வருடத்திற்கு ஒரு எக்டருக்கு பரிந்துரைக்கப்பட்ட உர அளவான 125 கிலோ தழைச்சத்து, 125 கிலோ மணிச்சத்து மற்றும் 250 கிலோ சாம்பல் சத்தின் மூன்றில் ஒரு பகுதியாகும்). |

| | |
|---|---|
| | ➢ மானாவாரிப் பகுதியில் முதல் தவணையாக, ஒரு எக்டருக்கு 81 கிலோ யூரியா, 187 கிலோ முசொரிபாஸ் மற்றும் 125 கிலோ பொட்டாஷ் என்ற அளவில் இட வேண்டும். (இது ஒரு வருடத்திற்கு ஒரு எக்டருக்கு பரிந்துரைக்கப்பட்ட உர அளவான 75 கிலோ தழைச்சத்து, 75 கிலோ மணிச்சத்து மற்றும் 150 கிலோ சாம்பல் சத்தின் இரண்டில் ஒரு பகுதியாகும்).<br>➢ மண் பரிசோதனையின் பரிந்துரைப்படி உரமிட வேண்டும். மண் பரிசோதனைப் பரிந்துரைகள் இல்லாவிட்டால் மேலே குறிப்பிட்டதுபோல் உரமிடலாம்.<br>➢ ரசாயன உரமிடும்போது ஒரு செடிக்கு 5 கிலோ தொழு உரம் அல்லது கம்போஸ்டு, 2.5 கிலோ நன்கு மக்கிய கோழி எரு, 1-2 கிலோ வேப்பம் பிண்ணாக்கு என்ற அளவில் கலந்து செடியின் தூர்ப்பகுதியிலிருந்து 30-40 செ.மீ. தள்ளி செடியினைச் சுற்றி 20 செ.மீ. அகலத்தில் வட்ட வடிவில் சிறு குழி எடுத்து இட வேண்டும்.<br>➢ இளஞ்செடிகளுக்கு, ஒரு வருடத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட உர அளவில் மூன்றில் ஒரு பங்கினை முதலாவது வருடத்திலும், மூன்றில் இரண்டு பங்கினை இரண்டாவது வருடத்திலும் இட வேண்டும். மூன்றாவது வருடம் முதல் பரிந்துரைக்கப்பட்ட முழு அளவினையும் இட வேண்டும். |
| **ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம்** | ➢ ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகத்தில், ஏலத்தட்டையின் பச்சையாக உள்ள இலை உறையை அகற்றாமல் காய்ந்த இலைகளை மட்டும் கவாத்து செய்ய வேண்டும்.<br>➢ குளோர்பைரில்லஸ் பூச்சிக்கொல்லியை 100 லிட்டர் தண்ணீரில் 200 மிலி என்ற அளவில் கலந்து தண்டு துளைப்பானின் அந்துப் பூச்சி வெளிவரும் சமயத்தில் தெளிக்க வேண்டும். |
| **நோய் நிர்வாகம்** | ➢ நீர் தேங்கும் பகுதிகளில் போதுமான வடிகால் வசதி அமைக்க வேண்டும்.<br>➢ அழுகல் மற்றும் கிழங்கு அழுகல் நோய் தாக்குதல் அதிகமுள்ள இடங்களில் பயிர்ச் சுகாதார முறைகளைக் கடைப்பிடிப்பது, பூசணக் கொல்லி மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளைப் பயன்படுத்துவது போன்ற ஒருங்கிணைந்த நோய் நிர்வாக முறைகளைக் கடைபிடிக்கலாம்.<br>➢ 0.2 காப்பர் ஆக்ஸி குளோரைடு கரைசலைத் தூர்ப்பகுதியில் ஊற்றுவதுடன் ஒரு சத போர்டோ கலவையைத் தெளிக்க வேண்டும்.<br>➢ 15 நாட்கள் கழித்து டிரைக்கோடெர்மாவைத் தனியாகவோ அல்லது சூடோமோனசுடன் கலந்தோ தூர்ப்பகுதியில் இட வேண்டும். மீண்டும் ஒரு முறை டிரைக்கோடெர்மாவைத் தனியாகவோ அல்லது சூடோமோனசுடன் கலந்தோ தூர்ப்பகுதியில் இட வேண்டும். 0.4 சத அகோமின் கரைசலைத் தெளிக்க வேண்டும்.<br>➢ உயிரி கட்டுப்பாட்டு முறையைக் கடைபிடிக்கும்போது, டிரைக்கோடெர்மா ஹேசியானத்தைத் தனியாகவோ அல்லது சூடோமோனஸ் புளோரசன்சுடன் கலந்தோ மண்ணில் இட வேண்டும்.<br>➢ தோட்டத்தை அடிக்கடி கண்காணித்து கட்டே (நச்சுயிரி) நோய் தாக்குதல் உள்ள செடிகள் காணப்பட்டால் அவற்றை உடனுக்குடன் அகற்றி அழித்துவிட வேண்டும். |

## மிளகு
### நாற்றங்கால்

- நாற்றங்காலில் பாலித்தீன் பைகளில் வைக்கப்பட்டுள்ள தண்டுப் பதியன்களுக்கு தேவைக்கேற்ப தண்ணீர் ஊற்ற வேண்டும்.
- கோடை மழை கிடைத்த உடன் போதிய சூரிய வெளிச்சம் கிடைக்க ஏதுவாக நாற்றங்காலின் நிழலைக் குறைக்க வேண்டும்.



### தோட்ட பராமரிப்பு

- பருவ மழை தொடங்கியவுடன் நிழலைக் குறைக்க நிழல் சீரமைப்பை மேற்கொள்ள வேண்டும்.
- நல்ல மழை கிடைத்தவுடன் இளங்கொடிகளுக்குக் கொடுத்திருந்த நிழல் பாது காப்பை அகற்றிவிட வேண்டும்.
- தாங்கு மரக் கன்றுகளை நட வேண்டும்.
- ஒரு கொடிக்கு 10 கிலோ தொழு உரம் அல்லது கம்போஸ்டு இட வேண்டும்.
- கடந்த வருடத்தில் சுண்ணாம்பு இடும் பணி மேற்கொள்ளவில்லையெனில், உயிர்க் காரணிக் கட்டுப்பாடு மற்றும் பூசணக் கொல்லி முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
- டிரைக்கோடெமா ஹேசியனம் மற்றும் சூடோமோனஸ் புளோரசன்சை மண்ணில் இடுவது நோயின் தாக்கத்தைக் குறைக்க உதவுகிறது.
- பூசணக் கொல்லி முறைக் கட்டுப்பாட்டு முறையைக் கடைபிடிக்கும்போது கீழே குறிப்பிட்டவற்றுள் ஏதேனும் ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.

1. பருவமழை கிடைத்தவுடன், எல்லா கொடிகளுக்கும் 0.2 சத காப்பர் ஆக்ஸி குளோரைடு கரைசலைக் கொடிக்கு 5-10 லிட்டர் என்ற அளவில் கொடியின் தூர்ப்பகுதியில் ஊற்ற வேண்டும். கொடியின் மேல் 1 சத போர்டோ கலவையைத் தெளிக்க வேண்டும்.
2. 0.3 சத பொட்டாசியம் பாஸ்போனேட் கரைசலைக் கொடிக்கு 5-10 லிட்டர் என்ற அளவில் கொடியின் தூர்ப்பகுதியில் ஊற்ற வேண்டும். கொடியின் மேல் 0.3 சத பொட்டாசியம் பாஸ்போனேட் கரைசலைத் தெளிக்க வேண்டும்.
3. 0.125 சத மெட்டாலாக்ஸில் மேன்கோசெப் கரைசலைக் கொடிக்கு 5-10 லிட்டர் என்ற அளவில் கொடியின் தூர்ப்பகுதியில் ஊற்ற வேண்டும். கொடியின் மேல் 0.125 சத மெட்டாலாக்ஸில் மேன்கோசெப் கரைசலைத் தெளிக்க வேண்டும்.

## வனிலா



- பருவ மழை தாமதமானால் தேவைக்கேற்ப கொடிகளுக்கு நீர்ப் பாய்ச்சுதலைத் தொடர வேண்டும்.
- ஒரு கொடிக்கு 1 கிலோ மண்புழு உரம் அல்லது 2 கிலோ தொழு உரம் அல்லது 2 கிலோ கம்போஸ்டு இட்டு அங்ககப் பொருட்களைப் பயன்படுத்தி மூடாக்கு இட வேண்டும்.
- பூக்கள் மலர்வது தொடருமேயானால், காலை 6 மணி முதல் மதியம் 12 மணி வரை கை கொண்டு மகரந்தச் சேர்க்கை செய்வதைத் தொடர வேண்டும்.
- நோய் வருமுன் காப்பது என்ற அடிப்படையில் 1 சத போர்டோ கலவை அல்லது 2 சத சூடோமோனஸ் (தூள் வடிவில், அதாவது ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிலோ என்ற அளவில்) அல்லது 1 சத சூடோமோனஸ் (திரவ வடிவில்) தெளிக்கலாம்.

| | |
|---|---|
| **இஞ்சி**  | ➢ தேவையைப் பொறுத்து களை எடுக்க வேண்டும்.<br>➢ அடியுரமிட்ட 40 நாட்கள் கழித்து ஒரு எக்டேருக்கு 80 கிலோ யூரியா மேலுரமாக இட வேண்டும்.<br>➢ மேலுரமிட்ட உடன் மண் அணைக்க வேண்டும்.<br>➢ எக்டருக்கு 5 டன் என்ற அளவில் பசுந்தழைகளைக் கொண்டு பாத்திகளின்மேல் மூடாக்கு இட வேண்டும். |
| **மிளகாய்** பராமரிப்பு  | ➢ மிளகாய் அறுவடை முடிந்தவுடன் வரும் பருவத்தில் மிளகாய் சாகுபடி செய்ய உள்ள நிலத்தில் பில்லிப்பசாரா, தட்டைப்பயறு, சணப்பை போன்ற பசுந்தாள் பயிர் களை விதைக்க வேண்டும்.<br>➢ மிளகாய்ச் செடிகளைப் பிடுங்கி துண்டுகளாக்கி மண்ணில் கலந்து விட வேண் டும். இதனால் மண் வளம் அதிகரிப்பதுடன் மண்ணின் நீர் பிடிப்பு தன்மையும் அதிகரிக்கும்.<br>➢ தேவைப்பட்டால் இம்மாதத்தில் மண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். |

## எழுதலாமே.....

ஸ்பைஸ் இந்தியா வாசகரே! நீங்களும் ஸ்பைஸ் இந்தியாவிற்கு எழுதலாமே! ஏலம், மிளகு, மிளகாய், கிராம்பு தொடங்கிய 'ஸ்பைஸ்' தொடர்பான உங்களின் அனுபவக் கட்டுரைகளை எழுதுங்கள்.

இயற்கை விவசாயம் தொடர்பாக இருத்தல் நல்லது.

– **ஆசிரியர்**

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு......

தங்களுக்கு இதுவரை கிடைத்து வந்த ஸ்பைஸ் இந்தியா சமீப காலங்களில் வரா திருந்தால் கணிணியில் தங்களின் பெயர் நீக் கப்பட்டிருக்கலாம். இது சந்தாக்காலம் நிறை வுற்றவுடன் கணிணி தானாகவே இந்த பெயர் நீக்கத்தை செய்துவிடும். எனவே தங்களின் சந்தாவைப் புதுப்பிக்க வேண்டுகிறோம். இது தொடர்பாக நினைவூட்டு கடிதமும் அனுப் பப்பட்டுள்ளது. எனவே சந்தாவை உடனே புதுப்பிக்க முயற்சிக்கவும்.

*– ஆசிரியர்*

# MONTHLY AVERAGE PRICES OF SPICES FOR MARCH 2009

| SPICE | CENTRE | GRADE | PRICERS / KG |
|---|---|---|---|
| Black Pepper | Kochi | Ungarbled | 104.24 |
| | | Garbled | 109.20 |
| Cardamom small | Vandanmettu E-Auction | bulk | 499.12 |
| | Bodinayakanur E-Auction | bulk | 493.21 |
| | Saklaspur | | 419.80 |
| | Sirsi | | 407.77 |
| | Maharashtra | | 518.75 |
| Cardamom (L) | Siliguri | Badadana | 144.60 |
| | | Chotadana | 128.00 |
| Chillies | Virudhnagar | | 50.38 |
| Ginger (Dry) | Kochi | Best | 100.00 |
| | | Medium | 95.00 |
| Turmeric | Kochi | Alleppey Finger | 48.67 |
| | Bombay | Rajpuri Finger | 74.33 |
| | Bombay | Duggirala | 49.17 |
| Coriander | | Indori | 43.50 |
| | | Kanpuri | 48.17 |
| Cumin | Bombay | 4% | 97.92 |
| Fennel | Bombay | - | 84.58 |
| Fennugreek | Bombay | - | 27.58 |
| Mustard | Chennai | - | 31.35 |
| Garlic | Bombay | - | 11.00 |
| Celery | Bombay | - | 11.00 |
| Clove | Cochin | - | NA |
| Nutmeg(with shell) | Cochin | - | 126.25 |
| Nutmeg(without shell) | | | 222.08 |
| Mace | Cochin | - | 425.00 |
| Cassia | Chennai | - | 81.00 |
| Vanilla* | | | 675.00 |

SPICES SOURCES

Average FOB export price - February 2009

Prices are collected from secondary sources like Agricultural Produce Market committees, Kirana Merchants Association, India Pepper and Spice Trade Association, Licensed Cardamom Auctioneers etc.

## அகில இந்திய அளவில் மார்ச் 2009ல் நடைபெற்ற ஏலக்காய் ஏல பட்டியல் (2008 மார்ச்சுடன் ஒப்பிடப்பட்டது)

| கால அளவு | மார்ச் 2009 | | மார்ச் 2008 | |
|---|---|---|---|---|
| | விற்பனை (கிலோ) | சராசரி விலை ரூ./கிலோ | விற்பனை (கிலோ) | சராசரி விலை ரூ./கிலோ |
| முதல் வாரம் | 1,76,219 | 497.24 | 98,290 | 573.87 |
| இரண்டாவது வாரம் | 2,35,141 | 492.73 | 89,911 | 534.53 |
| மூன்றாவது வாரம் | 2,07,502 | 474.61 | 1,08,362 | 473.68 |
| நான்காவது வாரம் | 2,02,679 | 514.98 | 66,593 | 502.42 |
| மொத்தம் | **10,29,608** | **496.18** | **4,07,793** | **513.58** |

ஆதாரம்: அங்கீகாரம் பெற்ற ஏல நிறுவனங்கள் அளித்த ஏல அறிக்கைகளின் அடிப்படையில்




Nani leverages 30years in delivering the finest in Indian Turmeric for domestic and international markets, combining the right mix of traditional expertise and research with dollops of creative thinking to offer complete qualitative Turmeric Whole and Ground at best competitive markets.

Nani's production facilities and headquarters are located in Erode, Tamilnadu, India - the heart of India's largest production area for turmeric crops. From an area that accounts for more than 70% of India's finest turmeric. Nani's merchandising activities reach producers all over the world.

ATC

Aditya®

Estd. 1972

ATC® ABHISHEK 5001® ADITYA TURMERIC® Nani®

**NANI AGRO FOODS (P) LTD.**

32, Ottukkara Chinnaiya Street, Erode - 638 003. TAMILNADU. INDIA.

Phone : Off. (0424) 2214111,2214011, 2217195 Tel : MEGAFIN Email : aditya501@eth.net

Website : www.adityaspices.com www.turmericworld.com

ஸ்பைஸ் இந்தியா தமிழ் மாத இதழ், ஏப்ரல் 2009
Tamil April 2009
Price per copy Rs. 5/-

REGISTERED No.
KL/EKM/106/2009-2011
RNI No. 44665/88
Date of publication : 27th of every month



World class lab for analysis of

Spices & Condiments



Shiva Analyticals India Limited, a world-class analytical laboratory that provides extremely cost effective and high quality analytical services for clients around the globe.

Extensive testing facilities for:

- Residual Pesticides
- Aflatoxins & Ochratoxin
- Banned Dyes
- Microbiological Contaminants
- Toxic Metals
- Nutritional Labelling
- Spec Parameters

Our Strengths

- State-of-the-art instruments like LCMS-MS, ICP-MS, ICP-OES, GCMS, GC, HPLC, FTIR
- Fast turnaround time
- Reliable & Reproduceable Analysis
- Cost comparable to Spice Board

YOUR ASPIRATIONS ARE OUR POSSIBILITIES

Spice Board Accredited

SHIVATEC
ANALYTICAL SOLUTIONS WORLDWIDE

ISO 17025 (NABL) & ISO 9001

SHIVA ANALYTICALS (INDIA) LIMITED

Plot No. 24D [P] & 34D,KIADB Industrial Area, Hoskote, Bangalore - 562 114. India.
Tel: +91-80-2797 1322/ 1626/ 1431 or +91 99002 42040 to 43 Fax: +91-80-2797 1321
Email: info@shivatec-india.com Website: www.shivatec-india.com

High on Art